

# பாலியல் நீதிக் கொள்கை

THE
LUTHERAN
WORLD
FEDERATION

A Communion
of Churches

# முன்னுரை:

மறைதிரு. மார்ட்டின் யூங்கே,
பொதுச்செயலாளர், L.W.F.

நீதியை நிலைநாட்ட விவிலியத்தின் அழைப்பே அன்பின் சுயபுரிதலின் மையமாக இருக்கிறது. இறையருள் நம்மை விடுவித்து, கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்ந்து, நீதி, அமைதி, ஒப்புரவு ஆகியவற்றை நிலைநாட்ட நம்மை இணைந்து பணியாற்ற அழைக்கிறது.

திருச்சபையிலும் வாழ்வு, சமுதாயத்திலும், முடிவெடுக்கும் நிலைகளிலும் மற்ற எல்லாச் செயல்பாடுகளிலும் இருபாலருக்குமான சமமான பங்களிப்பைத் தந்து ஒருங்கிணைந்த வாழ்வு வாழ L.W.F. தம்மை அர்ப்பணித்தது. இது கடந்த கால வரலாற்றில் மேற் கூறியவற்றின் செயல்பாடுகளை நினைவுகூறுகிறது.

2013–ல் L.W.F. குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பாலியல் கொள்கையானது, ஒருங்கிணைந்த பணியின் பயணத்தை விரிவுபடுத்தும் கருவியாய் திகழ்கின்றது. அன்பியத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் வளர்ச்சியிலும் பங்குபெற்ற நிலையில் உறுப்பினர் திருச்பைகளின் எண்ணங்களாகவும் லூத்தரன் அடையாளத்தின் அடிப்படை விவிலிய இறையியல் கோட்பாடுகளின் அடிப்படையாகவும், சூழலுக்கேற்ப செயல்திட்டங்களை வடிவமைத்து பிராந்தியத்திற்கேற்ப செயல்படுத்துவதற்கு வழிமுறைகளையும் பாலின ஒருமைப்பாட்டையும் முன்னிலைப்படுத்துவதே இதன் பணி.



LWF பொதுச் செயலாளர்,–மறைதிரு. மார்ட்டின் யூங்கே,
@LWF/H. Putsman-Penet

L.W.F.ன் வரலாற்று அர்ப்பணிப்பான பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒடுக்க தலைமைத்துவத்தில் அவர்கள் இடத்தை உறுதிப் படுத்துதலும் போல, இப்பாலியல் நீதிக் கொள்கை L.W.F. இயக்கமான தனது ஒருமைப்பாட்டின் நோக்கத்தை இயல்பாக்கிக்கொண்டிருக்கும் வேளையில் மற்றுமொரு மைல்கல்லாக திகழ்கிறது.

இந்த ஒருமித்த பயணத்தில், இந்த ஆவணம் சில பயணத்திட்டத்தை தயாரித்துள்ளது. அது பல வாய்ப்புகளை மாற்றத்திற்கான நோக்கில் வரையறுக்கப்பட்டு, அதிகாரத்தின் அடிப்படையிலும், உறவின் அடிப்படையிலும் மாற்றம் நிகழ அழைக்கிறது. திருச்சபைத் தலைவர்கள், இறையியலாளர்கள் தலைமைத்துவத்திலும் அதிகார மையத்திலும் இருக்கின்ற பெண்கள், ஆண்கள் நிழச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு பாலியல் நீதியை நம்பிக்கையோடு உறுதிப் படுத்த அழைக்கிறது. ஆதலால், திருச்சபைகளிலும், பொது இடங்களிலும் பாலியல் நீதி ஓர் அடிப்படை கண்ணோட்டமாய் இருக்கின்றது.

உங்களிடம் பாலியல் நீதிக் கொள்கை வரும் சமயத்தில் சமுதாயத்தாலும், திருச்சபையாலும் பெண்கள் சவால்களை எதிர்கொண்டிருத்தலோடு பெண்ணும், ஆணும் இறையமைப் பின்படி நீதியின் மூலம் தங்கள் உறவை நிலைநாட்ட அந்த அழைப்பிற்கு செவிசாய்க்கிறார்கள். L.W.F. அன்பியம் தொடர்ச்சியான மாறுதல்களை, புதிதாக்குதலை லுத்தரின் 500வது சீர்த்திருத்தத்தை வலியுறுத்தி 2017 ஆம் ஆண்டு கொண்டாடுவதன் விளைவாக இது வெளியிடப்படுகிறது. இதை உங்கள் பிரார்த்தனையின் மூலமாய், பகுத்தறிதலின் மூலமாயும் கற்று திருச்சபைகளில் மாற்றம் ஏற்படுத்துங்கள் என கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் பாலின உறவுகள் என்பது இறைவனின் மாறும் திறனுக்குட்பட்டு நீதியும், சமத்துவமும் இணைந்த ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும்.

–மறைதிரு. மார்ட்டின் யூங்கே,
பொதுச் செயலாளர்,
L.W.F.



# பாலியல் நீதியின் பாதையில் ஒன்றிணைந்து நடப்போம்! - ஓர் பயிற்சிப் பயணம்...

> “உனக்கென சாலை அடையாளங்களை அமைத்துக்கொள்; உனக்கென கைகாட்டிகளை நாட்டிக்கொள்; நீ நடந்து சென்ற வழியாகிய நெடுஞ்சாலையை நினைவிற் கொள்.” (எரே. 31:21)

L.W.F. ஒருங்கிணைப்பில் பாலியல் நீதி குறித்தான ஒரு பயிற்சிக் கலந்தாய்வு எப்படி கற்பிக்கிறோாம், கற்றுக்கொள்கிறோம், கூடியிருந்து ஒருவருக்கொருவர் உதவி புரிகிறோம் என்பதை பரந்த சிந்தனையுடன் நோக்க உதவுவதோடு மட்டுமல்லாமல் நாங்கள் இப் பயணத்தில் சேர்ந்து நடக்கும் பொழுது ஒருங்கிணைப்போடும், ஒற்றுமையோடும் இருக்க வேண்டிய வழிகளைக் கற்றுத் தருகிறது.

L.W.F. ன் பாலியல் நீதிக்கொள்கை விதிமுறைகளோடும் கட்டுப்பாடுகளோடும் அமைக்கப்பெற்று, பாலியல் நீதியை செயல்படுத்த முனைகிறது. பல்பேறு சூழலில் வாழ்ந்து கொண்டிருப்போருக்கான செயல் திட்டத்தை வடிவமைக்கவே இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே :

ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது; அது புத்துயிர் அளிக்கிறது ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது: எளியவருக்கு அது ஞானத்தை அளிக்கின்றது.

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை: அவை கண்களை ஒளிர்விக்கின்றன.

ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது. அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையனவை; அவை முற்றிலும் நீதியானவை.

அவை பொன்னிலும், பசும்பொன்னிலும் மேலாக விலைமிக்கவை, தேனிலும், தேனடையினின்று சிந்தும் தெளிதேனிலும் இனிமையானவை என்று ஜெபிக்கிறோம். (தி.பா. 19:7–10)

விவிலியத்தில் கூறப்பட்ட இத் திருச்சட்டங்கள், நியமங்கள், புத்துயிர் அளித்தலோடு, இதயத்தை மகிழவிக்கின்ற பணியிலே பெண்ணும் ஆணுமாக இணைந்து நீதியையும் உறவுகளில் மேன்மையையும் நிலைநாட்டுகின்றனர்.

இந்த ஆவணம் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பாலியல் நீதிக்கொள்கைகள் மற்றும்
2. பாலியல் நீதிக்கொள்கை முறைமைகள்.

L.W.F. ன் பாலியல் நீதிக்கொள்கை, சமுதாயத்தின் அனைத்து தளங்களிலுமுள்ள இடங்களில் பாலியல் நீதியை இடம்பெறச் செய்கிறது.

## பாலியல் நீதிக்கொள்கைகள்:–

L.W.F. அன்பியத்தின் பாலியல் நீதிக்கொள்கையை உறுதிப்படுத்தும் விதமாக இப் பத்து கொள்கைகள் நடுநாயகமாய் திகழ்கின்றன. அவை ஒரு அன்பியத்திற்கு பாலியல் நீதி என்றால் என்ன என்பதை விவரிக்கும் மையமாய்த் திகழ்கிறது. பாலியல் நீதியை நோக்கிய அன்பியப் பயணத்தில் அவை கண்ணாடியாக இருந்து அன்பியத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் கருவியாகவும், அந்த நெடுஞ்சாலையில் அடையாளமாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கிறது.

## பாலியல் நீதிக் கொள்கை முறைகள்:–

L.W.F. ன் பாலியல் நீதிக்கொள்கையின் முறைகள், அந்த கொள்கைகளை பிராந்தியத்தின் வெளிப்பாட்டின் மூலமாகவும், அமைப்பில் உள்ள திருச்சபைகள் அதைத் தங்கள் சூழலுக்கேற்ப அமைத்துக்கொள்வதற்கும் கருவியாகத் திகழ்கிறது.

இவ்வியக்கம் பிராந்தியத்தின் அடிப்படையில் கண்காணிக்கப்படும். உலகளவில், பொதுச்செயலாளர் அவர்கள் பாலியல் நீதிக்கொள்கையின் செயல்பாடுகளைக் குறித்த ஒரு ஆய்வை கூட்டத்தில் அறிவிப்பார்.

உறுப்பினர்களாக உள்ள திருச்பைகளின் எளிமையான புரிதலுக்கும், நிகழ்ச்சிகளின் விரைவான செயல்பாட்டிற்காகவும் முறைமை மற்றும் வழிமுறைகள் வகுக்கப்படும்.

அறிவார்ந்தவர்களின் வட்டமும், செயல்படுவோர்களின் அன்பியமுமே அவ்வறிவை விரிவுப்படுத்தவும், ஒருவரையொருவர் தாங்கவும் உதவும். அதுவே பாலியல் நீதிக் கொள்கை முறைமையின் இலக்காகும்.

# விவிலிய அடிப்படையும் பகுத்தறிதலும்:-

> "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவி இருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.
>
> .... கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாயிருந்தன". தொடக்கநூல் 1:1–2,31 (a))

தொடக் நூலிலே படைப்பைக் குறித்ததான செய்திகள் சமமான நிலையில் சொல்லப்பட்டிருக்கும். இருந்த அனைத்துமே கடவுளை முழுமையாகச் சார்ந்த நிலையில் இருந்தன. தொடக்கநூல் 2–ன்படி மனிதத்தன்மை மட்டும் எதிர்பதமாக இல்லை, ஒரு வகையான மனிதர் (ஆண்கள்) இன்னொரு வகையான மனிதருக்கு (பெண்கள்) மேலான வனாய் இருக்கிறான். எவ்வாறாயினும் தொடக்கநூல் கூறப்பட்டுள்ள படைப்பின் கதைகளை, படைத்தவருக் கும், படைப்புக்குமான வேறுபாட்டை உணர்ந்துகொள்வதற்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர பெண்ணுக் கும் ஆணுக்குமான வேறுபாட்டிற்கு அன்று. படைப்புகள் படைத்தவரைச் சார்ந்திருக்கிறது என்பதே படைப்பைக் குறித்ததான இறையியல் ஞானம்.

படைத்தவர் மற்றும் படைப்புக்கு மான அடிப்படை வேறுபாட்டை அன்பால் மட்டுமே விவரிக்க முடியும். அதை இருவேறு பாலினங்களாலோ மனிதருள்ளாகவோ விவரிக்க முடியாது.

கடவுள் அனைவரையும் சமமாக பார்த்தார். (தொடக்க நூல் 1:27). கடவுளின் தொடர்ச்சியான படைப்பில் ஆணும், பெண்ணும் சரிசமமாக பணி செய்து பாதுகாக்கவே அழைக்கப் பட்டுள்ளனர்.

இந்த பகுதி பாதுகாப்பதும், அன்பு செய்வதும் மிகமுக்கியமானது என்பதை வலிவுறுத்துகிறது. கடவுளின் பார்வையில் நீதி செய்வதும், பாதுகாப்பதும் மனிதர்களின் கடமையாக கருதப்படுகிறது.

அப்பொழுது கடவுள் "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்கு வோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்து பறவைகளையும், கால்நடை களையும், மனுக்குலம் முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரை படைத்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார். (தொடக்கநூல் 1:26–27).

விவிலியம் சமவாழ்வுக்கு அடிப்படையாக இருக்கிறது. நற்செய்தி பகுதிகளில் இயேசு பெண்களை எவ்வாறு சமமாக வரவேற்று ஏற்புடையவர்களாக நடத்தும் பார்க்கின்றோம். விவிலிய சாட்சிகள் கடவுளின் வார்த்தை ஆணுக்கும், பெண்ணுக்கும் பெரு வாழ்வு தரும் வார்த்தையாக இருக்கின்றது.

> கலாத்தியர் 3:27–28ன்படி, கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி, திருமுழுக்கு பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டுள்ளீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை.

இயேசுவோடு இணைந்துள்ள
நீங்கள் யாவரும் ஒன்றாய்
இருக்கிறீர்கள்.

பாலின உறவின் நிலையிலே, விவிலிய ஆய்வும் இறையியற் புரிதலும் மாற்றத் திற்கான உரையாடல் ஒருங்கிணைப் பது இந்த அன்பியம் மாற ஈர்க்கிறது. பெண்களையும், ஆண்களையும் கடவுள் அருளிய மாண்பிலிருந்து பிரிக்கும் பாலின ஏற்றத்தாழ்வுகளை களைந்தொழித்தா லொழிய ஆண் பெண் சமநீதியையும், சம உரிமையையும், நிலைநாட்ட முடியாது. நம்பிக்கையிலும் விசுவாசத் திலும் அன்பியம் பயணிக்கும் போது தான் தூய ஆவியாரின் துணை கொண்டு நாம் வாழ்வு தரும் விவிலியத்தை உள்வாங்க இயலும். இதுவே L.W.F.ன் அதிகார மையத்தில் எடுக்கப்பட்ட அடிப்படை கோட்பாடாகும்,

## ஆணை / உத்தரவு:–

அக்டோபர் 2009 ஆம், ஆண்டு, "உங்களுக்குள் அப்படியிருக்க



முடியாது!பாலினம் அதிகாரம் குறித்த ஒரு நம்பிக்கை கண்ணோட்டம்" என்ற அறிக்கையைப் பெற்றது. மேலும் திருச்சபைகளை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களை L.W.F. பாலியல் நீதிக்கொள்கைகளில் உற்சாகமாய் பங்கேற்க அழைத்தது.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற 11–வது L.W.F. கூடுகையில் இரண்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### L.W.F.–ன் ஒருங்கிணைக்கும் கொள்கைகள்

பாலினச் சமநிலை: L.W.F.–ல் உள்ள அனைத்துக் கூடுகையிலும், சங்கங்களிலும், பொறுப்பிலிருப்பவர் களிலும், அலுவலகங்களிலும் அனைத்து பிராந்தியங்களையும் சேர்த்து குறைந்தது 40% ஆண்களும் இருப்பார்கள். அதில் பாலின ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளைஞர் பிரதிநிதிகளும் அடங்குவர்.

L.W.F.–ன் அனைத்து நிகழ்வு களிலும் இந்த அடிப்படைக் கோட்பாடு கடைபிடிக்கப்படுகிறது. L.W.F. பணியாளர்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்குகிறார்கள். L.W.F.–ன் குழு அலுவலகத்தில் கூட இது கடைபிடிக்கப்படுகிறது.

### பாலியல் நீதி மீதான தீர்மானம்:–

திருச்சபையிலும், L.W.F. குழுமங்களிலும் சமுதாயத்திலும் பெண்களுக்கான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த ஒரு கூடுகையை அவசரமாகக் கூட்டினோம். அந்த காரியத்தில் திருச்சபைகளை மீண்டும் அர்ப்பணிக்க செய்தோம்.

இறையியல் பயிலுவதற்கான வாய்ப்புகளுக்காகவும், பெண்களை திருநிலைப்படுத்துதலிலும் அவர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தும் விதமாக செயல்திட்டங்களும், சட்டங்களும் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம். பெண்களை குருத்துவப் பணிக்கென்று திருநிலைப்படுத்தாத திருச்சபைகளை இறைவன் செய்யச் சொன்ன கட்டளையை மீள்பவர்களாக கருதப்பட்டார்கள். ஒதுக்கி வைத்தலின் வலியையும், இறைவன் தரும் கொடைகளை இழத்தலுமே மொத்த திருச்சபையின் அனுபவமாக இருந்தது.

திருச்சபை அனைத்து பணிகளிலும் குறிப்பாக டயக்கோனியா (சீடத்துவம்) மற்றும் உதவி (பணியாட்கள்) ஊழியங்களில் விவிலிய ஆய்வு கருவிகளையும் இறையியற் சார்புகளையும் பாலினத்தை சரியாய் வரையறுக்க பயன்படுத்தல் வேண்டும் என்பதைக் குறித்து கேட்டுக் கொண்டோம்.

L.W.F. செயலகத்தின் செயல்படுத்தும் விதமாக உறுப்பினர் திருச்சபைகளிடமிருந்து சூழலுக்கேற்ப பாலியல் கொள்கைகளை அமைப்பதற்கான தெளிவான செயல்வடிவத்தைக் கேட்டோம். அந்த செயல்வடிவத்திட்டத்தை பரிசீலித்து அமல்படுத்த L.W.F. சங்கத்தின் உதவியையும் நாடினோம்.

அன்பியத்தின் முக்கிய உறுப்பினர்களாக பெண்களையும், திருநிலைப்படுத்தப்பட்டோர் மற்று.ம் சபை மக்கள் ஆகிய இருவரையும் குறிப்பாக பெண் பேராயர்களையும் தலைவர்களையும் கொண்டுவர உதவி கோருகிறோம்.

ஒவ்வொருவரும் தத்தம் இல்லங்களிலும், எல்லாப் பணியிடங்களிலும், திருச்சபைகளிலும் பாதுகாப்பு

---

1. At **www.lutheranworld.org/content/resource-it-will-not-be-so-among-you-faith-reflection-gender-and-power**

2. Ackonwledging the exsisting challenges, meetings and activities in which the basic principle has not been applied are not to be declared invalied, but their non-compliance with the basic principle shall be formally recognized and actions to improve on this to be planned.

3. Give Us Today Our Daily Bread, Official Report, LWF Eventh Assembly, Stuttgari, Germany, 20-27 July 2010 (Geneva: The Lutheran World Federation, 2010), 61.

உணர்வுடனும் மாண்புடனும் நடத்தப்படுவதை ஏற்றுக்கொண்டு உறுப்பினர் திருச்சபைகளை இல்லம் சார்ந்த வன்முறைக்கு எதிரான தெளிவான நிலை எடுக்க அழைக்கிறோம்.

L.W.F.–ன் ஆலோசனைப் பேரவையானது, அதனுடைய விவாத அட்டவணையில் பாலியல் நீதியை நிலையான விவாதப் பொருளாக வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஆலோசனைப் பேரவையானது இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

2013–ல் நடைபெறவிருந்த ஆலோசனைக் குழு கூட்டத்தில் L.W.F.–ன் பாலியல் நீதிக்கொள்கையின் முன்படிவத்தை குழும அலுவலகம் தாக்கல் செய்யுமாறு 2012ல் கொலாம்பியாவில் ஒன்று கூடிய L.W.F. ஆலோசனைக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

2013–ல் ஜெனீவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பாலியல் நீதிக்கொள்கை யானது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## விளக்கம்:–

L.W.F.–ன் பாலியல் நீதிக்கொள்கை யானது நடைமுறை கொள்கைகளை வரையறுத்து அன்பியங்கள் பாலியல் நீதியை அடைவதற்கான அடிப்படை களை தருவித்து வழங்குகிறது.

பாலியல் நீதி: படைப்பின்கூட்டுப் பொறுப்பாளிகளாகவும், இறை சாயலில் படைக்கப்பட்டவர்களுமான பெண், ஆண் இருபாலரின் மாண்பினைப் பாதுகாத்து மேம்படுத்துதலை பாலியல் நீதி உள்ளடக்கியுள்ளது.

பாலியல் ரீதியான காழ்ப்புணர்ச்சிகளை நிரந்தரப்படுத்தும் நிறுவன, கலாச்சார சலுகைகளை அல்லது அடக்குமுறைகள் இவைகளை நீக்குகிற பெண், ஆண் இருபாலருக்கன சமநிலை உறவுகள், சமத்துவம் மூலமாக பாலியல் நீதி வெளிப்படுத்தப்படுகிறது.

### பாலியல் நீதி:

### L.W.F. குழுமத்தின் காணும் தோற்றம் (VISION)

நீதி, அமைதி, ஒப்புரவு இவைகளுள்ள உலகிற்காக வாழ்ந்து ஒன்றுபட்டு உழைக்கும் கடவுளின் அருளால் விடுதலையாக்கப்பட்ட ஒரு சமூகமே திருச்சபையாகும்.

4. Ibid., 56.

5. LWF Strategy 2012-2017,9 at **www.lutheranworld.org/content/core-lwf-documents**



எல்லா மானிடரும் செழிப்புற உரமூட்டும் பாலியல் நல்லுறவுகளுட னான நல்வாழவின் அன்பியங்களை உருவாக்கவும், அநீதிகளையும் அடக்குமுறைகளையும் எதிர்க்கவும் L.W.F.–ன் குழுமமானது, கிறிஸ்துவில் வாழவும் பணி செய்யவும் அழைக்கப் பட்டிருக்கிறது.

அன்பியத்தில் இருத்தல் என்பது இறையருளின் நற்செய்தியினால் உரமூட்டப்பட்ட ஆன்மீகப் பயணத்தில் பங்கெடுப்பதும், கடவுளோடும், பிறரோடும், திருவிருந்தில் ஒன்றிணை வதும் திருமுழுக்கைப் பெற்று அதை தினமும் வாழ்தலுமாகும். கிறிஸ்துவில் வழ்வது என்பது, நம்மிடையே வேறுபாடுகள் இருப்பினும் அவ் வோறுபாடுகளுக்கு புதுப்பொருளை கண்டுகொள்வதாகும்: நம்மிடையே நிலவும் வேறுபாடுகள் கொடைகளே. இக்கொடைகள் சமமானவை. வேறுபாடுகள் சமத்துவ மின்மை அல்ல. ஒருவர் மற்றொருவரை விட சிறந்தவர் அல்ல. அனைவரும் சமமே.

பாலியல் கண்ணோட்டம் உறவு களைச் சார்ந்து சமூக இனக்கூறு களோடு எதிரெதிர் (interact) செயலாக்கம் கொண்டுள்ளது. பகுப்பாய்வு அணுகுமுறையானது தனித்துவத்தின் சில அம்சங்கள் ஏற்றத்தாழ்வுகளை விளைவிக்கின்றது. எடுத்துக்காட்டாக பாலினம், வம்சம், மரபு பின்னணி, வயது, திறன், வகுப்பு போன்றவை அமைப்பு நிலைகளில் தனிமனிதரை பிறரிலிருந்து பிரிக்கிறது. சமத்துவமின்மையில் பல்வேறு செயலமைப்புகள் உள்ளன. இவை அதிகார வர்க்கத்தோடு தொடர்புடையவை. ஆயினும் இவற்றை பகுப்பாய்வு செய்ய வேண்டும். இனம், வகுப்பு, சாதி, வயது போன்ற அடக்குமுறை எதார்த்தங்களை எதிர்கொள்ள பிற காரணிகளையும் பயன்படுத்த வேண்டும். பாலியல் வாதக்கருத்துக்களை எதிர்கொண்டு பகுப்பாய்வு செய்வதன் மூலமாகவே ஒரு நிறுவனம் மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

நீதி செயல்படுத்தப்படுகிறது என்று உறுதிப்படுத்தும் குழுமங்களால், மனித உறவுகளும், அமைப்புகளும் வழிநடத்தப்படுகின்றன. உல்களாவிய, பன்னாட்டுக் குழுமங்கள் எடுத்துக் காட்டாக (ஐக்கிய நாடுகள்) தனிமனிதன், குழுக்கள், நாடுகள் இவற்றை (வழிநடத்த) ஒழுங்குமுறைப் படுத்த சட்டக் கட்டமைப்புகளைத் தருவித்துள்ளன. இத்தகைய நீதி பற்றிய கருத்துருவாக்கத்தை L.W.F.–ன் பாலியல் நீதிக்கொள்கை யானது செயலளவில் ஏற்றுக் கொள்கிறது. விசுவாசம் தழுவிய நிறுவனங்களிலும், திருச்சபைகளிலும் நீதி பற்றிய கருத்து விவிலிய, இறையியல் சிந்தனைகளோடு இணைந்து செல்கிறது. நீதியானது, விவிலிய, இறையியல், இறைவாக்கின மொழியில் தெளிவுறக் கூறப் பட்டுள்ளது. இறையியல் கருத்துக் கண்ணோட்டத்திலும் மனித உரிமைகள் கண்ணோட்டத்திலும், எதார்த்தங்களை பகுப்பாய்வு செய்யும் திறனாய்வு முறையே இவ்வனுகுமுறை தருகிறது. எல்லா செயல்களிலும் அமைப்புகளிலும் பாலியல் தன்மையை நிறைந்து செயலாக்கவும், பெண், ஆண் ஆகிய இருபாலரையும் வலுவேற்றவும், பாலியல் நீதி குறித்தும் அர்ப்பணத்தை முழுமையாக்வும் எடுக்கப்படும் முயற்சியே L.W.F.–ன் பாலியல் நீதிக்கெள்கை, குறிக்கோள் மற்றும் செயல்முறையாகும்.

### தேர்வுமுறை:–

பாலியல் அடக்குமுறை காரணமாக ஒதுக்கப்பட்ட, தரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன தேவை என்பதே பாலியல் நீதிக்கான நமது தேர்வுமுறையின் மையக்கேள்வியாகும். பாலியல் நீதி குறித்த–மட்டில், நிறுவன அமைப்புகளிலும், மனப்பான்மையிலும் ஏற்படும் மாற்றங்களை அளக்கும் குறியீடுகளாக கீழ்க்காண்பவைகளை பயன்படுத்தலாம்:

* தீமையின்மை அணுகுமுறை : வன்முறை, உயிரிழப்பு, திறனிழத்தல்.
* குறியீட்டு விளக்கம் : பெண், ஆண் இவர்களின் சரிநிகர் பங்கெடுப்பு (எண்ணிக்கை), பங்கெடுப்பின் முக்கியத்துவம் (தரம்)
* தீர்வுகாண்தல், தலைமைத் துவத்தில் எண்ணிக்கையிலும் தரத்திலும் சரிநிகர் பங்கேற்பு.

- ⋆ வளங்களைப் பெறுதலிலும் பயன்பாட்டிலும் சமநிகர் பங்கேற்பு.
- ⋆ ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் தரும் நியாதிகளை பயன்படுத்துதல்.

மேற்கூறிய பாலியல் நீதி கொள்கையை நிலைநாட்டுவதற்கான சூழலுக்கேற்ப செயல்திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் ஒவ்வொரு சூழலுக்கேற்ப குறிப்பிட்ட அளவுகள், எண்கள், தகவல்கள், ஆலோசனை அல்லது புரிதல்களும் தெளிவாக விவரிக்கப்பட வேண்டும்.

## குறிக்கோள்:—

ஒருங்கிணைந்த மற்றும் நிலையான சமுதாயமும் திருச்சபையும் அமைய வேண்டும் என்பதற்காக L.W.F.—ன் பாலியல் நீதிக்கொள்கை அதற் வளர்ச்சிக்காக அரசியல் கருத் தோட்டங்களையும் அதற்கு உதவியாய் நிற்கும் சில கருவிகளையும் தொடர்ந்து வழங்குகிறது.

L.W.F.—ன் பாலியல் நீதிக் கொள்கையானது அன்பியத்திலும், அதன் உறுப்புத் திருச்பைகளிலும், மன்றங்களிலும், குழுக்களிலும் பாலின சமத்துவத்தை சூழலுக்கேற்ப அதன் நீதியையும் மாண்பையும் நிலைநாட்டுவதற்கு கருவியாய் உள்ளது.

## நோக்கம் : பாலியல் நீதி ஏன்?

ஆக்கப்பூர்வ உள்ளுணர்வுகளை சமுதாய மாற்றம் சமூக நியதிகள், மதிப்பீடுகள், உறவுகள், புதுச் செயல்பாடுகள் ஆகியவைகளுக்காக உருவாக்கி பாலியல் நீதியை உறுதிப்படுத்துவதே பாலியல் நீதிக்கொள்கையின் உள்நோக்கமாகும். L.W.F.ன் பாலியல் நீதிக்கொள்கை யைத் தழுவிய செயல்படுதல் உறுப்பினர் திருச்சபைகளை, அன்பியங்களைக் கீழக்கண்டவாறு வழிநடத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- ⋆ வழிகாட்டும் குறிப்புகளுடன் கூடிய இக்கொள்கையை பாலியல் நீதிக்கான ஒரு அன்பிய அர்ப்பணிப்பென அடையாளம் கண்டுகொள்ள.
- ⋆ திருச்சபைகள் பாலியல்நீதி நோக்கி முன்னேறுகையில் அத்திருச்சபைக் கொண்டுள்ள சாத்தியக் கூறுகளையும் எதிர்கொள்ளும் சவால்களையும் தன்னுடைய பங்கேற்பு தற்திறனாய்வுகளில் ஈடுபடுத்த.
- ⋆ பெண்களும், ஆண்களும் பாரம்பரியமாகச் செய்துவரும் பணிகளை விவாதிக்கவும், சிந்திக்கவும், மரபு, கலாச்சார ரீதியாக திருச்சபையிலும் சமூகத்திலும் தங்களுக்கென நியமிககப்பட்ட கடமைகளைத் தாண்டி செயல்படுவதை ஊக்குவிக்க. இதனால் மாற்று வழிமுறைகளிலும், திறன்களிலும் திருச்சபைக்குப் பணிபுரிய திறனும் விருப்பமும் கொண்டவர்களை ஊக்குவிக்கவும்,
- ⋆ திருச்சபை தலைமையானது விவிலியப் பகுதிகளின் விளக்கங் களை விவாதிக்க, சிந்திக்க ஊக்குவிக்கப்படுகிறது. விவிலியப் பகுதிகளுக்கு மாற்றுப் பொருளைத் தரும் விளக்கங்களையும், பெண்—ஆண் இருபாலருடைய பங்கேற்பு, கடைமைகள், பொறுப்புகள் இவற்றை வெளிக்கொண்டு வரும் புது விளக்கங்களைப் பற்றி விவாதிப்பதையும் சிந்திப்பதையும் ஊக்குவிக்க.

திருச்பைத் தலைவர்கள், மற்ற சமூகத் தலைவர்களோடு இணைந்து பாலின சமத்துவத்திற்கு உழைக்கும் வாய்ப்பினைப் பெற்றுத்தர.

## L.W.F. குழுமத்திற்கு "கொள்கை" என்பதென்ன?

"கொள்கை" என்பது மதிப்பீடுகளின் வெளிப்பாடு;

கொள்கையானது பாலின நீதிக்கான நோக்குநிலையையும் இலக்கையும் தருகிறது. பாலியல் நீதிக்கான நமது எதிர்பார்ப்புகளுக்கு ஒரு கட்டமைப்பை உருவாக்குகிறது.

ஒரு சமூகத்தினுள் அரசியல் ஈடுபாடு பல்வேறு நிலைகளில் செயல்படுகிறது. ஒருவருக்கொருவர் உடனிருத்தல் மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகக்குழு மற்றும் சபை ஆகியவற்றில் தீர்மானங்கள் அமையும் வண்ணம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி கொண்ட உறுப்பினர் திருச்சபைகளின் ஒரு கருவியே L.W.F. என்றும், மேலும் L.W.F. க்கு எவ்வித படிநிலை (Hierardhical) அதிகாரம் இல்லை என்றும் அமைப்புச்சட்டம் கூறுகிறது.

சுதந்திரத்தோடு இணைந்து வருவது பொறுப்புணர்வு. எனவே அமைப்புச் சட்டத்தின் அமைப்பும், செயல்பாடும் என்ற மூன்றாவது அலகு, உறுப்பினர் திருச்சபைகள் இறைவார்த்தையை அறிவிப்பதில் ஒன்றுபடுவதையும், இறைவார்த்தை பணியிலும் திருச்சடங்குகளிலும் ஒன்றிணைப்பு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மேலும் L.W.F. இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கான ஒன்றுபட்ட சான்றுபகர்தலை வலியுறுத்துகிறது.

உலகளாவிய உறுப்பினர் திருச்சபைகளுக்கிடையே திருத்தொண்டர்பணி, மானுடத்தேவைகளைப் பூர்த்தி செய்தல், அமைதி மற்றும் மானுட உரிமைகளை மேம்படுத்துதல், சமூக மற்றும் பொருளாதார நீதியை வலியுறுத்தல், கடவுளுடைய படைப்பின் மீது கரிசனையும் கவனமும் கொள்ளுதல், வளங்களைப் பகிர்தல் ஆகியவற்றை தொடரச் செய்கிறது. மேலும் உறுப்பினர் திருச்சபைகள் தங்களின் கூட்டுக் கல்வி மூலமாக தன்னிலை அறிதலையும், உறுப்பினர் திருச்சபைகளுக்கிடையே ஒன்றிப்பையும் வளரச் செய்கிறது.

எனவே, “கொள்கை” என்பது L.W.F. தன்னுடைய உறுப்பினர் திருச்சபைகளின் ஒன்றுபட்ட சாட்சியத்தையும் அத்திருச்சபைகளின் மானுட உரிமைகள் மற்றும் நீதியை மேம்படுத்துதலையும் வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகும். இன்று விளக்கமாக வெவ்வேறு நிலைகளில் அல்லது மாறுபட்ட பொறுப்புகளின் தளங்களில் ஒத்துணர்வுடன் இருப்பது என்றால் என்ன என்பதை வெளிப்படுத்தும் மன்றம் (அரங்காகும்) வழிமுறையாகும்.

## சபை தீர்மானங்கள்:—

தன்னுடைய 2013—வது வருடக் கூட்டத்தில் L.W.F. பாலியல் நீதிக்கொள்கையினை ஏற்றுக்கொண்டு அன்பியங்களின் எல்லா நிலைகளிலும் பாலியல் நீதி அர்ப்பணத்தை செயல்படுத்த, பரிந்துரைகளைப் பின்பற்ற வாக்களித்தது. L.W.F. ன் பாலியல் நீதிக் கொள்கை வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளவும், இவ்வழிமுறைகளை சூழலுக்கேற்ப செயல்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பில், தலத்திருச்சபை கலாச்சார வெளிப்பாடுகளில் செயல்படுத்த வேண்டுமென்று ஒட்டளித்தது.

## பொறுப்புகளின் நிலைகள்:—

L.W.F. ன் அமைப்புச் சட்டத்தின் வழியில், கொள்கைச் செயல்படுத்துதலில் கீழ்க்காணும் நிலைகள் உள்ளடங்கியுள்ளன.

* சபை ஆலோசனைக்குழு அலுவலர்களின் ஒன்றுகூடல்: பாலியல் நீதிக்கொள்கையினை பொதுவான இலக்கிற்கு (நோக்கத்திற்கு) பயன்படுத்தி குழுமத்தின் அலுவலகப் பணிகளை ஒழுங்குபடுத்த வேண்டும்: நிர்வாகக் குழுக்கள் இக்கொள்கைகளின் உள்ளடங்கிய நிர்ணயங்களையும் பெண், ஆண் இரு பாலருக்கான தீர்வுகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் பொறுப்புடையன. மேலும் நிர்வாக கட்டமைப்பும் திட்டமிட்டப் பணிகளும் பாலியல் நீதியில் கொள்கைக் குறிப்புகளைச் சார்ந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

## அன்பியங்கள் திட்டங்களும், செயலாக்கங்களும் மற்றும் LWF-ன் நாட்டு திட்டங்களும்.

* எங்கெல்லாம் இந்தக் கொள்கையை நடைமுறைபடுத்த முடியுமோ அங்கெல்லாம் அவைகளை நடைமுறைபடுத்தப்பட்டு சீர்த்தூக்கி பார்க்க வேண்டும். இந்த கொள்கையானது விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய தாகவும், திறன்களை வளர்க்கக் கூடியதாகவும் பாலியல் நீதியை ஏற்படுத்த உறுதுணையாக இருந்திட வேண்டும். அனைத்து திட்ட செயல்களிலும் இதனை கடைபிடித்தல் அவசியமாகிறது.

* உறுப்பு திருச்சபைகள் இந்த கொள்கையை திருச்சபை ஆலோசனைக்குழு மற்றும் திருச்சபை சங்கத்திலும் கடை பிடித்திட வழிவகைகளை உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு உறுப்பு திருச்சபையின் தன்னாட்சி மற்றும் சூழலையும் கருத்தில் கொண்டு இந்த கொள்கையை அவர்களும் கடைபிடித்திட வழிவகை செய்ய வேண்டும். ஒருவரையொருவர் சார்ந்து ஒற்றுமையாக நடந்திட தேவையான மாற்றங்களையும், தீர்மானங்களையும் செய்திட வேண்டும்.

### பிராந்திய அலுவலகங்கள்

பிராந்திய அலுவலகங்கள் இந்த கொள்கைகளை சூழலுக்கேற்ற மாற்றி அமைக்க வேண்டிய தகவுகளை ஏற்படுத்தின வேண்டும். அதற்கு தேவையான சூழல்களை உருவாக்கி கலந்துரையாடல் மூலமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையை பின்பற்றுவதற்கு ஏற்ற வழிமுறைகளை ஏற்படுத்திட வேண்டும்.



# L.W.F. பாலியல் நீதிக்கொள்கைகள்

LWF திருச்சபைகள் கூட்டாக கடைபிடித்திட

1. பாலியல் நீதியை மேம்படுத்தின (Promote) கண்ணியமும், நீதியும் அனைத்து மனிதர்களுக்கும் உலக மனித உரிமையாக கிடைத்திட அறைகூவல் விடுத்துள்ளது.

2. சமமான பங்கெடுத்தல், சரியான பொறுப்புனர்தல் மற்றும் சமமான மரியாதை எனும் கண்ணியத்தின் கூறுகளை உயர்த்தி பிடித்தல் (Up hold)

3. அனைத்து சங்கம், ஆலோசனை களுக்கும் மற்றும் பிராந்திய கட்டமைப்புகளில் சரிசமமான பங்களிப்பை உறுதி செய்து முடிவு எடுப்பதிலும் சம பங்கை அளித்தல் (Apply).

4. எல்லா மேம்பாட்டு திட்டங்களை மற்றும் நலத்திட்டங்களிலும் பாலியல் நீதியை நிலைநாட்டிட அனைத்து ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல் இதனடிப்படையில் அனைத்து திட்டங்களையும் ஆய்வு செய்தல் (Ensure).

5. பாலியல் சார்ந்த வன்முறைகளை கண்டிக்கவும், பாலியல் சார்ந்து முறையற்ற சொத்து பங்கீடுகளையும் தடை செய்து பெண்களின் முன்னேற்றத்திற்கு துணை புரிய வேண்டும் (Support).

6. பாலியல் நீதிக்காக பங்கெடுக்கும் கண்களை ஊக்குவித்தல் (Activety Promote)

7. அனைத்து கட்டமைப்புகளிலும் பெண்களின் தலைமைத்துவம் மற்றும் முடிவெடுத்தலுக்கும் தடையாக இருக்கும் அமைப்புகளை எதிர்த்தல் (Ad-dress)/

8. முக்கிய நிர்வாக முடிவெடுத்தல், மனித வளம், அலுவலகர்கள், பயிற்சி, நீதி பங்கீடு, மற்றும் நிர்வாக கொள்கைகளில் பாலியல் நீதி கடைபிடிப்பதை உறுதி செய்தல் (Ensure).

9. பாலியல் ரீதியான ஆய்வுகள் ஒவ்வொரு திட்டங்களிலும், அவைகளில் திட்டங்களில், செயல்முறைகளில், திறனாய்வு களில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல் (Ensure).

10. இறையியல், தியான, மற்றும் வழிபாட்டு முறைகளில் பாலியல் நீதி கடைப்பிடிக்கப்பட வேண்டும் (Engage).



# L.W.F. பாலியல் நீதிக்கொள்கையின் முறையியல்

L.W.F. ன் பாலியல் நீதிக்கொள்கை செயல்முறையானது, பாலியல் நீதியின் நிறைவை இலக்காகக் கொண்டுள்ளது,

பாலியல் நீதிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் அணுகுமுறைக்கு இந்நீதிக் கொள்கையானது தரும் வழிகாட்டுதல் – காணுதல், தீர்மானித்தல் ஈடுபடுதல் ஆகிய மூன்றடுக்கு செயல்முறையை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இவையே நம் சூழலுக்கேற்ப மாற்ற நாம் பயனிக்கும் வழித்தடங்களாகும். ஒரு கூட்டமைப்பின் எல்லா வெளிப்பாடுகளும் இத்தகைய வழிமுறையோடு Interact செய்யுமாறு ஊக்குவிக்கப் படுகின்றன. இதனால் (தங்களுடைய சூழமை, மொழி இவைகளுக்கேற்ப) இவ்வடிப்படை கருத்துக்களை மாற்றிக் கொணர இயலும்.

- **காணுதல் :** நல்ல எதார்த்தங்களையும், சூழமையையும் உற்று நோக்குதல்.
- **தீர்மானித்தல் :** விவிலிய இறையியல் உலகளாவிய மானுட வரிமைக் கருத்துக்கள் இவற்றை பயன்படுத்தி இச்சூழமைகளிலிருந்து எழும் மானிட உரிமை சிக்கல்களை எதிர்கொள்கிறது.

லூத்தரன் அன்பியங்களில், பாலியலானது விவிலியம், லூத்த மரபு ஆகிய கண்ணாடிகள் மூலம் விசுவாச பின்னணியில் ஆராயப்படுகிறது. விசுவாசப் பின்னணியில் பாலியல் நீதியானது பாலியல் சத்துவமாக விளக்கப்படுகிறது. சமத்துவ உறவுகளைப் பற்றி விவாதிக்க "நீதியுணர்வே" ஆரம்ப கட்டமாகும். மானுடர் அனைவரின் மாண்பை உறுதிப்படுத்தவும் மறுவுருப் பெறவும் நீதியானது அடித்தள மாக அமைந்த இறைவாக்கின் அறிவிப்பாக எதிரொலிக்கிறது.

நீதி பற்றிய இறையியற் சிந்தனையில் விவிலியக் கருத்துக்கள் மேலோங்கி வருதலும் அனைத்து பகுதியிலும் விவிலியச் சிந்தனைகள் வெளிப்படுதல் அவசியம்.

லூத்தரன் தனித்தன்மையின் அடிப்படை இறையியற் கருத்துக்கள் அனைத்தும் பாலியல் நீதி என்ற ஆடியின் (lens) வழியாகக் காணுதல் வேண்டும். இத்தகைய உரையாடலிலிருந்து, பாலியற்நீதிக் கொள்கையின் இறையியல் பார்வை முளைக்கின்றது.

### Act : ஈடுபடுதல் : செயலாக்கமும், சூழ்நிலைப்படுத்தலும் :

இம்மூன்றாம் பகுதி, செயலாக்கத்திற்கு செயல்முறைக் குறிப்புகளையும், வழமுறைகளையும் கோடிட்டு காட்டுகிறது. பாலியல் நீதி நிறைந்து காண ஏழு குறிப்புகளை வரையறுக்கின்றது. மதிப்பீடுகள், பங்களிப்பு பற்றிய முன்னுரையோடு செயலாக்கத்திற்கான வழிமுறைகள் கூறப்படுகின்றன. ஈடுபடுதல் என்பது செயல்படுத்தல், எதார்த்தங்களை உற்று நோக்கி கண்டுணர்ந்த பின்பு இச்சூழமையில் எழும் (மானிட உரிமை). சிக்கல்களுக்கான செயல்முறை பற்றிய ஒத்த உணர்வு (ஒத்துணர்வு) அடைதல்.

காணுதல் : நம்முடைய கூட்டமைப்புகள், இருபாலர் உள்ளடக்குமையின் பயணத்தில் எங்குள்ளது? பெண்களின் பங்கேற்பு பாலியல் ஆய்வு ஆகியவற்றில் நாம் எங்குள்ளோம் என்ற முதல்நிலை கருத்துக்களை முதற்பகுதி விளக்குகிறது. கூட்டமைப்புகளில் பெண்களின் பங்கேற்பு சரிதையை கூறி, பாலியல் என்பது எவ்வாறு ஒரு இறையியல் கருவி என்பதை விளக்குகிறது.

மேலும், யதார்த்தங்களை காணுதலும் கூட்டமைப்புகளில்: பாலியல் குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கியுள்ள தடைகள் பற்றி எழும் பல்வேறு குரல்களுக்கு கவனமாக செவிமடுத்தலும் L.W.F.ன் பாலியல் நீதிக்கொள்கையின் செயல்படுத்தும் முதற்படி என்றுக் கருதப்படுகிறது, பாலியல் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் பாலியற் நீதிக்கொள்கைகளையும் வெற்றிடத்தில் உருவாக்க இயலாது. மாறாக, பல்வேறு குழுக்கல், கூட்டமைப்புகள், தனிநபர்கள் பற்றிய தெளிவான சிந்தனையில் உருவாக்கப்படுகிறது.

### தீர்மானித்தல் / பகுத்துணர்தல்: விவிலிய இறையில் அடிப்படைகள்:

லூத்தரன் கூட்டுறவில் பாலியல் நீதி ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? கூட்டுறவு வெவ்வேறு மாநிலங்களில் / பகுதிகளில் சூழமைப்படுத்தக்கூடிய தெளிவான, உயிரோட்டமுள்ள ஒரு கொள்கையை கொண்டிருக்கும் நோக்கோடு L.W.F. பாலியல் நீதிக் கொள்கையானது, பாலியல் நீதியை பிரதிபலித்து செயல்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழு புவியற்பகுதிகளில் (ஆசியா, ஆப்பிரிக்கா, வடதுருவம், கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா) இவற்றில் உள்ள 142 உறுப்பினர் திருச்சபைகளில் அன்பியங்களின் சூழமைகள் முற்றிலும் வேறுபாடானவை. இவற்றில் முக்கியமானது அன்பியங்களின் மொழிகள், மாறாக அன்பியங்களின் அலுவலக மொழியாக ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் ஸ்பானியன் உள்ளன. இவ்வளமான பன்முகத்தன்மையை தொடர் உரையாடலுக்கும், சூழமைப்படுத்தலுக்கும் திறந்த மனமுள்ளவராக்வும் எழுத்தில் வெளிப்படுத்துவதும், வாதங்களை முன்வைப்பதும் ஒரு சவாலே. மேலும் விவாதங்களைத் தூண்டவும், உருவமாற்றத்திற்கு வித்திடவும் நாம் எவ்வாறு இக்கொள்கையினை அமைக்கப் போகிறோம்?

L.W.F.ன் பாலியல் கொள்கையானது திருச்சபையின் சமூக உறவு, அமைப்பு இவைகளில் மாற்றத்தை ஏற்படுத்த நமக்கு கொடுக்கப்பட்டள்ள ஒரு அழைப்பாகும். அறிவுப்பூர்வமாக சிந்திக்க வாழ்வு முதற்படியாக அமைகிறது. எனவே இச்செயல்முறை கட்டமைப்பானது, கொள்கை தொகுப்பில் விவரிக்கப்பட்டுள்ள சில குறிப்புகளை எவ்வாறு சூழமைபடுத்த வேண்டும் என்று விவரிக்கிறது. எனவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் எதார்த்தங்களை பகுப்பாய்வு செய்தல், வினாக்கள் தொடுத்தல், உள்ளுணர்வோடு நாம் வாழும் சூழமையை

ஆராய்தல் ஆகியவை முதற்படிகள், இவற்றை தொடர்ந்து, மனித உரிமைகளோடு நாம் சேர்க்கும் இறையியற் சிந்தனைகள், வளர்சித் திட்டங்களையும் அமைப்புகள், கலாச்சார மரபுகள் இவற்றை திறனாய்வு செய்தல் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. பகுப்பாய்வு மட்டும் பலன் தராது; கருத்துக்கள் (concepts) மதிப்பீடுகள் இவற்றை வாழ்விற்கு கொண்டுரும் செயல்பாடே முக்கிய மானது. எனவே செயலாக்கம், சாதனை இவ்விரண்டுமே நாம் எதிர் பார்க்கும் இன்றியமையாத இறுதி முடிவாகிறது,

அன்பியம் தீவிரமாக ஈடுபட்டிருக் கும் பல்வேறு கலாச்சார மரபுகளை சூழமைப்படுத்தலே பெரும் சவாலாக அமைந்துள்ளது; கலாச்ாரம் என்பது ஒரு குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை, நம்பிக்கைகள், மதிப்பீடுகள், அடையாளங்கள் ஆகியவற்றை இணைத்து வரும் ஒரு மரபுத் தொகுப்பு அறிவு என்று விளக்கப் பட்டாலும், இது ஒரு நடுநிலையான கருத்தல்ல. இது ஒரு இயக்கப்பூர்வ மான ஒரு கருத்தாகும்; சூழமைப்படுத் தும் முறையானது கலாச்சார கூறுகளையும், செயல்தன்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொரு சூழலும் தத்தம் சூழமையில் முன்னிறுத்தி செயலாக்கப்பட வேண்டியவற்றை விளக்கும். ஒரு சூழமை மற்றொரு சூழமை மீது ஆதிக்கம் செலுத்தி எது முக்கியம் என்று விவரிக்க இயலாது. பரஸ்பர கற்றுக்கொள்ளல், பகிர்தல் போன்ற பண்புகள் சமூகத்திலும், திருச்பையில் எல்லாப் பகுதிகளிலும் நிகழும் செயல்பாடுகளின் மூலம் பாலியல் நீதியை அடைய இன்றியமையாதவை. இச்சிந்தனையிலும், செயல்பாட்டிலும் ஈடுபட்டிருக்கும் மக்களின் எத்தகைய மாற்றத்தை இவை கொண்டு வரும் என்பது தான் இச்செயல்பாட்டின் முழுமுதற் கேள்வி.

இறுதியாக, ஆனால் மிக முக்கியமாக, கொண்டாட்டம்! ஒன்று கூடி வருதலையும், திருச்சபையின் வாழ்வு, இறையியல் இவற்றில் ஆணித்தரமான மாற்றங்களை உருவாக்குவதற்காக ஆலோசிக்க நமக்கு சாத்தியமானது குறித்து கொண்டாட வேண்டும், அன்பியங் களைக் கொண்டாட வேண்டும்– ஒன்றிணைப்பை கொண்டாட வேண்டும். செபித்துப் பாடுவோம்.

> “கடவுள் தம் மக்களோடு
> கரங்களைக் கோர்த்த
> வண்ணமாய் புதுவாழ்விற்கு
> அழைக்கிறார்; மாற்றத்திற்கான
> நேரம் இதுவே–அத்தருணம்
> இதுவே! எல்லோரும்
> ஒன்றிணைந்து நடப்போம்–
> எவராலும் தனித்துச் செல்ல
> இயலாது. எனவே வாருங்கள்
> இணைந்திருங்கள்”
> (Thuma Mina 221).

கடவுள் தம் மக்களை புதிய தருணத்திற்கு அழைக்கிறார்.


## உள்ளடக்குமை நோக்கிய பயணத்தில் அன்பியங்களின் நிலைபாடு என்ன?

### *பெண்களின் தலைமைத்துவமும் பங்கேற்பும்*

L.W.F. தன்னுடைய மதிப்பீடுகளில் ஒன்றாக "உள்ளடக்குமை"யை எடுத்துக்கொள்ள தன் இறை யியலையும், செயல்முறை பங்கேற்பு களையும் பல்லாண்டுகளாக தொடர்ந் துள்ளது. பெண்களின் பங்கேற்பை உறுதி செய்ய பல்வேறு காலகட்டங் களில் எடுத்த தீர்மானங்கள் துணைபுரியும்.


2. 1952–ல் ஜெர்மனி–ஹன்னோவரில் நடைபெற்ற இரண்டாம் L.W.F. (assembly) ஒன்று கூடலில் பெண்களுக்கான தனிப்பகுதி ஒன்று சேர்க்கப்பட்டு, பெண்கள் ஆணையம் ஒன்று ஏற்படுத்தப் பட்டது. அதுவே, 1975ல் நியமிக்கப்பட்ட பெண்களின் பிரிவிற்கான முதற்பரிந்துரை குழுவின் முன்னோடியாகும். 1970 ஆம் ஆண்டு பிரான்சு எவியனில் நடைபெற்ற L.W.F. ன் ஐந்தாம் ஒன்றுகூடலில் பெண்களுக்கான தனி "பிரிவு" உருவாக்க முடிவெடுக் கப்பட்டது.

## *Presentage of LWF Member Churches Ordaining Women*




- Churches Ordaining Women
- Churches Not Ordaining Women Yet

## *Presentage of Member belonging to LWF Churches Ordaining Women*




- Membership of Churches Ordaining Women
- Membership of Churches Not Ordaining Women Yet

The right-hand pie chart reflects that the vast majority of the 70.5 million Lutherans in the communion belong to an LWF member church that ordains women.

2. 1984–ல் ஹங்கேரி–பூதபஸ்ட் நகரில் நடைபெற்ற ஏழாவது ஒன்று கூடலில், பெண்கள், பொது நிலையினரின் பங்களிப்பு குறித்து முக்கியமான தீர்வுகள் எடுக்கப் பட்டன. அதில் குறைந்தபட்சம் 40% பெண்கள் பங்கேற்பை உறுதி செய்ய இடஒதுக்கீடு (Quota) முறையை நிறுவிட முடிவுகள் எடுக்கப்பட்டன, இவை 1990 குருத்திபாவில் நடைபெற்ற எட்டாவது ஒன்று கூடலிலும், 2003ல் வின்னிபெர்க்கில் நடைபெற்ற ஒன்பதாவது ஒன்று கூடலிலும் உறுதி செய்யப்பட்டன.

அகில உலக கூட்டமைப்புகளில் நிறைவேற்றப்பட வேண்டிய செயல் முறையாக பெண்களின் குருத்துவப் பணி விளங்குகின்றது என்பதை லூத்தரன் குழுமத்தின் அலுவலக தீர்மானங்களை எடுக்கும் அமைப்பு களும் வலியுறுத்துகின்றன. அதில் ஒரு கருத்து என்னவெனில், திருநிலை படுத்தப்பட்ட பணிகளில் பெண்களின் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் உள்ளர்த்தங்களும், இறையியல் சிந்தனைகளும் முக்கியமானவை என்பதாகும். திருச்சபை தன்னிலை அறிவு வளர்ச்சி பெறுகின்றதென்றும் அது விவிலியத்தின் உள்ளடக்கு தன்மையை பகிரங்கமாக

அறிவிக்கின்றது எனவும் காட்டு கின்றது. திருநிலைப்படுத்தப்பட்ட பணிகளில் பெண்களின் பங்கேற்பு, உள்ளடக்கு அன்பியங்களை கட்டுவதில் இன்றியமையாததாகும். உள்ளடக்கு தன்மைக்கு, தீர்மானங்கள் நிறைவேற்றும் அமைப்புகளில் ஆண், பெண் இருபாலரின் முழுமையான பங்கேற்பு இன்னொரு இன்றியமையாத படிகட்டாகும்.

எல். டபிள்யூ. எஃப். பல்வேறு வழிகளில் தொடர் மறுமலர்ச்சியல் ஈடுபட்டுள்ளதை (Ecclessia Semper Reformata) மேலும் வலியுறுத்து கிறது.

பெண்களின் முழு பங்கேற்பை ஆதரிக்கும் சிந்தனைகளையும், முடிவுகளையும் மனதிற் கொண்டு அன்பியங்களில் பல்வேறு ஆக்கப்பூர்வ மான மாற்றங்களும் தீர்மானங்களும் உருவாக்கின்றன. எடுத்துக்காட்டாக, இட ஒதுக்கீட்டு முறை L.W.F. ன் நிறுவன அமைப்புகளான ஒன்று கூடல்கள், சங்கங்கள் இவற்றில் பகிர்ந்தளிக்கப்படும் தலைமைத் துவத்தை அளிக்கிறது.

பற்பல நிலைகளையும், பதவிகளை யும் பெண்கள் அடைய முயற்சி செய்யும் போது அவர்களுக்கு எதிராக அமையும் பலவிதமான நடைமுறை தடைகளை எதிர்கொள்ளும் வகையில் இடஒதுக்கீட்டு முறையின் அமைப்பு இயக்கம் வரைவு–படுத்தப்பட்டு இருக்கிறது. L.W.F. ஐ சார்ந்த பெண் களின் குழுக்கள், பெண்கள் இளம் பெண்கள் தங்களுடைய அண்மையா ருக்கு தரக்கூடிய தொண்டு சேவைகள் மூலமாக சமுதாயத்தின் பொது நலனிற்குப் பங்களிக்கின்றன. எனி னும் பாலியல் அமைப்புகள், உறவுகள் எவ்வாறு சிலரை உயர்த்தியும் சிலரை அடக்கி வேதனைகளை தந்து அதன் மூலம் திருச்சபையின் பங்களிப்பு வாழக்கையையும் சமூகத்தையும் பாதிக்கின்றது என்பதை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை.

இடஒதுக்கீட்டு முறையானது, பெண்களின் பிரசன்னத்தை உறுதிப் படுத்தும் ஒரு முக்கிய கருவியாக இருக்கும் போது, அவர்களுடைய நிறைவான பங்களிப்புக்கு எதிராக கருத்தார்ந்த பல தடைகள், பல சமயங்களில் எழுகின்றன. பன்னாட்டு ஒன்றுகூடல்களிலும், சங்கங்களிலும் எடுக்கக்கூடிய தீர்வுகளுக்கும், தலதிருச்சபைகளில் நிகழக்கூடிய நிகழ்வுகளுக்கும் பெரும் முரண்பாடு இருப்பதை பார்க்கின்றோம். இடஒதுக் கீட்டுமுறை பிரசன்னத்தை உறுதிப் படுத்தினாலும் பங்களிப்பை உறுதி செய்வதில்லை. இதற்கு முன் நடந்த ஒன்றுகூடல்களின் தீர்மானங்களுக்கு பிரமாணிக்கமாயிருக்கவும், நிறைவான உள்ளடக்குத் தன்மையை அடையவும் திருச்சபையாக, பன்னாட்டு அன்பியமாக பெண்களும் இளைஞரும் கொண்டு வரும் புத்துணர்ச்சியால் மாற்றம் பெற ஒரு அவசர நிலை (தேவை) எழுந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் (கூடாது) என்ற திருச்சபைகளின் குரல்களை உருவெடுக்கச் செய்யும் இறைவாக்குத் தன்மை L.W.F. கூட்டமைப்பின் வாழ்வில் ஒரு மைல்கல் எனலாம். இது, திருச்சபைகளில் வன்முறை உள்ளது என்று ஏற்றுகொண்டு இவ்வன் முறையை எதிர்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளை விவாதிக்கிறது.

திருச்சபைகள், திருச்சபைகள் சார்ந்த அமைப்புகள் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க எடுக்கும் முயற்சிகள், அநீதிக்கு எதிராக தொடுக்கும் ஒரு போராட் டத்தை சார்ந்துள்ளது. திருச்சபை களின் செயல்முறை திருத்தொண்டு, இறையியல் சிந்தனை ஆகியவை விசுவாசம், இவற்றை திறனாய்வு கண்ணோட்டத்தோடு அணுகுதலின் ஒரு முக்கிய பங்காகும். பெண் களுக்கு எதிரான வன்முறைகள் அடிக்கடி நிகழும் தனியார் துறை களுக்கு பெண்களை தள்ளும் கலாச் சாரத்திற்கும், சமயத்திற்கும் நிலவக் கூடிய ஒரு மிகப்பெரிய அபாயகரமான பிணைப்பை இவ்வணுகுமுறை கண்டிக்கிறது.

“பெண்களுக்கு எதிரான வன்முறை “கூடாது” ஏன்ற உரைக்கும் திருச்சபை” என்று L.W.F.ன் செயல் திட்டத்தை செயலாக்குவது பற்றிய சிந்தனையும், அனுபவமும், வன்முறையை மேற்கொள்ள எடுக்கப் படும் தீர்மானமான அம்சங்களில் விசுவாசம் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஒவ்வொரு எதார்த்தமும் உண்மையில் எப்படி இருக்கிறதோ அப்படியே அதை அணுக நமக்கு கிடைக்கும் அமைழப்பே கிறிஸ்தவ அழைப்பாகும், எனவே அன்பியம் ஒவ்வொன்றும்

பெண்களுக்கு எதிரான வன்முறை அனைத்துமே பாவம் என்றும், திருச்சபைகளானது பாவத்திலிருந்து விடுதலை பெற்ற அமைப்புகளாக இருத்தல் வேண்டும் என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

## பாலியல் நீதியின் வழியில் அன்பியங்கள்

நிறுவன, அமைப்புகளின் நிலைகளில் பாலியல் நீதியை நிலைநிறுத்த (அடைய) வழிமுறைகளை உருவாக்க தன்னுடைய பங்களிப்பை தேடி தொடர் முயற்சியினை மேற் கொள்ளுகிறது L.W.F.

* 1997 ஹாங்காங்கில் நடை பெற்ற ஒன்பதாவது ஒன்றுகூடலில் பாலியல் சமத்துவத்திற்கு பங்களிப்பது L.W.F. குழுமத்தின் முழுமுதல் பொறுப்பாகும் என உறுதி செய்யப்பட்டது: இறையியல், விவிலிய கண்ணோட்டத்தில் விசுவாச அடிப்படையில் பாலியல், அதிகாரம் இவற்றை நீதி, உறவுகளின் பின்னணியில் விவாதித்து, தலைமைத்துவத்தின் விவாதப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

* 2003ல் கனடா–வின்னி பெக்கில் நடந்த பத்தாவது ஒன்று கூடலில், பற்பல விவாதப் பொருள்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளும் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு, திருச்சபை, சமூகம், இவற்றின் வாழ்வில் பெண்களும் இளைஞரும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது,

* நமது அயலாருக்கு ஆழ்ந்த உள்ளுணர்வோடு கூடிய கரிசனையோடு தொடர்புள்ள–போது தான் இறையியற்சிந்தனையானது அர்த்தமுள்ளதாகிறது என்பதை திருச்சபைகளின் திருத்தொண்டு அனுபவங்கள் நமக்கு காட்டுகின்றன. ஒடுக்கப்பட்டவர், துன்புறுவோர் இவரோடு பயணித்து அவர்களின் அழுகுரலைக் கேட்டு, துன்பத்தை கண்டு அவர்களைத் தொட்டு அவர்களுடைய உள்ளுணர்வுகளை நமது உள்ளுணர்வாக எடுக்கும் போது மட்டுமே, திருச்சபைகள் தங்களுடைய திருத்தொண்டு பணிகளில் ஈடுபடுத்துகின்றனர் எனலாம். ஆக்கப்பூர்வமான இயக்கமும், விசுவாசத்தின் களஞ்சியத்தி லிருந்து பற்பல அரிய நுண்ணறிவு கருத்துக்களைக் கொடுக்கும் போது திருச்சபைகள் உரிமைக் குடிமக்களாக அல்லது குடியுரிமை பெற்ற மக்களாக வாழ்கின்றனர். திருச்சபைக் குடியுரிமை என்பது ஓர் இறையியல் அடையாளம்: படைப்பு, எல்லா மனுக்குலம் இவற்றை நோக்கிய நிலையான, நிரந்தர செயலாக்கமாக



திருச்சபைகள் தத்தம் அழைப்பை உணர்கின்றன.

* புலன்களுக்கப்பால், தொட இயலா கடந்த நிலையிலிருந்து வெளியேறி ஆழ்ந்த கழிவிறக்கத்தோடு இவ்வுலகின் இன்ப துன்பங்களின் வேதனை நம்பிக்கைகளில் தன்னைத்தானே நுழைத்துக்கொண்ட இறைவனின் பரிவிரக்கத்தை மனதிற்கொண்ட திருச்சபைகளின் திருப்பணியின் ஒரு பகுதியாகும்.

* இத்தகைய திருத்தொண்டு பற்றிய தெளிதலில் L.W.F. எல்லா மனிதரின் சமத்துவத்தையும் நிறையுரிமைகளையும் மேம்படுத்த உழைக்கின்றது. ஏழைகள், ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளை நிலைநிறுத்த, எல்லா மக்களும், எல்லா நிலைகளிலும், எல்லா உறவுகளிலும் குறிப்பாக பாலியல் உறவுகளிலும் நீதியை நிலை நிறுத்தும் திருத்தொண்டு அனுபவம் அடித்தளமாக விளங்குகிறது.

* 2009–ல் “It will not be so among you-A faith reflection on gender and power” என்ற ஆவணத்தில் பாலியல், அதிகாரம் பற்றிய சிந்தனைகள் முறைப்படுத்தப்பட்டு, வெளியிடப்பட்டது. பாலியல் பகுப்பாய்வு பற்றிய இறையியல் சிந்தனைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. பாலியல் உரிமைக் கொள்கை உருவாக்கமானது, இதனை அடிப்படையாகக் கொண்டது,

* மேலும் திருச்சபைகளின் கூட்டமைப்பான L.W.F. மனித உரிமைகளை மேம்படுத்தும் உறுப்பினர் திருச்சபைகளின் உழைப்பையும் அனுபவத்தையும் எடுத்துக் கொண்டு பாலியல் நீதிக்கொள்கையை உருவாக்க தன்னைத்தானே அர்ப்பணித்துள்ளது. திருச்சபைகள், திருச்சபைகளில் நிறுவனங்கள் போன்றவை கொண்டிருக்கும் பாலியல் கொள்கைகள் அகில உலக பாலியல் கொள்கைகளை உருவாக்கும் அடித்தளமாகின்றன. அனுபவங்கள் தலத்திருச்சபைகளில் சேகரிக்கப்பட்டு, முறைப்படுத்தப்படுகின்றன. இவ்வனுபவங்கள், தனித்தன்மைகள், ஒருமைப்பாடுகள் இவற்றைக் கொண்டு, L.W.F. கூட்டமைப்பிற்கான புதிய கொள்கை உருவாக்கப்படுகிறது,

உறுப்பினர் திருச்சபைகள், அலுவலகங்கள், செயல்பாடுகள், செயல்திட்டங்கள் ஆகிய அன்பியங்களின் பல்வேறு முயற்சி களிலும், செயல்களிலும் பல பாடங்கள் கற்றுக் கொள்ளப்படுகின்றன. இப்பாடங்கள் இறையியல் சிந்தனை யோடு திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூக கலாச்சார அமைப்புகள் எவ்வாறு பெண்களின் தலைமைத்துவத்தில் பாதிக்கின்றன என்ற வினாக்களைத் தொகுத்து அவற்றிற்கான விடைகளை காண முற்படுகின்றன. எல்லா பெண்களையும் அரங்கிற்கு அழைப்பதிலிருந்து (பிரசன்னம்) எல்லாப் பெண்களும் அரங்கினில் எவ்வாறு சமத்துவ நிலைகளில் பங்கெடுக்க செய்ய வேண்டும் என்ற மாற்றம் உருவாகின்றது.

## விவிலிய இறையியல் அடிப்படை : பாலியல் நீதி ஏன் லூத்தரன் குழுமத்திற்கு முக்கியமானது?

L.W.F. குழுமத்தில் பாலியல் நீதிக்கெள்கை ஒன்றை உருவாக்கி ஏற்றுக்கொள்ளல் அதனுடைய இறையியற்பணி, இவ்வுலகிற்கான கடவுளின் பேரருள் இவற்றிற்கு (உடல்உரு) உடலுறு கொடுக்கும் செயல் திட்டத்தின் இன்றியமையாத ஒரு பாகமாகும். விசுவாசச் செயலான பாலியல் நீதிக்கு பரஸ்பர பொறுப்பேற்கவும், அதைக் குறித்த அறிவை ஆழப்படுத்தவும் பல்வேறு இறையியல் வளங்களை லூத்தரன் இறையியல் கொண்டுள்ளது.

சூழமைப்படுத்துதல் லூத்தரன் இறையியலில் ஒரு முக்கியமான மைல்கல். L.W.F. அமைப்பில் இது

தொடரும்.

பிராந்திய உரையாடல்களை உள்ளடக்கியது. L.W.F. ன் 2012–2017 செயல்திட்டத்தின்படி, அன்பியங்களின் உறவுகள் ஒன்றோடொன்றை சார்ந்தவை. தீர்மானங்களை நிறைவேற்றவும் அதை செயல்படுத்தவும் பல மையங்கள் உள்ளன. குழுமத்தின் அங்கமாக இருப்பது உறுப்பினர் திருச்சபைகளை வலுவூட்டவும், அன்பிய வாழ்க்கைக்கு உருக்கொடுக்கவும் ஏதுவாகின்றது. அன்பியங்களின் கலாச்சார பன்முகத்தன்மை சிறப்பிக்கப்பட வேண்டும். பன்முகத்தன்மை பரஸ்பர கற்றல், பரஸ்பர விவாதம் அனுபவப் பகிர்வு ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்கிறது.

இத்தகைய பல மையங்களுக்கும் அவற்றிற்கிடையே நிலவும் உறவாடல்களுக்கும் பாலியல் நீதியானது ஒரு அறிமுகமாக விளங்குகிறது.

இக்கொள்கையின் துவக்கத்தில், L.W.F. குழுமத்தின் பாலியல் நீதி பற்றிய புரிந்துணர்வின் விவிலிய அடித்தளமாக, சமத்துவம் நிதி இவற்றின் விவிலிய பிம்பங்கள் முன்வைக்கப்படுகின்றன. மானிடம் ஆண் பெண் என்று கடவுளின் சாயலாக படைக்கப்படுகிறது: ஆண்–பெண் வேறுபாடு கொண்டவர்கள், ஆனால் சமமானவர்கள். பெண்ணும், ஆணும் கடவுளின் படைப்பை பராமரிக்கும் பேற்றினையும் பொறுப்பினையும் சமமாகப் பெறுகின்றவர்கள். மானிடர் இறைவனைச் சார்ந்தவர்கள் எனவே ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்து கொள்கின்றனர்.

பாலியல் விவிலிய விளக்கங்களின் மூலம் படைப்பு கதைகளை அணுகும் போது கீழ்க்காணும் கேள்விகளை போன்ற பல நெருக்கடியான கேள்விகள் எழலாம்:

ஆண்–பெண் இருபாலரும் மானிடர் அனைவரிடத்திலும் உறவு கொள்ளக்கூடிய இறைவனின் முழுமுதற்தன்மையை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர்? ஆண், பெண் இருபாலரும் படைப்பின் தொடர் நிகழ்வில் கடவுளின் பங்காளிகளாக சமமாக எவ்வாறு வாழ்கின்றனர்? சமபங்குத் தன்மையை மேம்படுத்த சமமான படைப்பு, சமமான காப்பாளர்கள் என்ற விவிலிய கருத்து எவ்வாறு விளக்கம் பெறு கின்றது? உங்களுடைய கலாச்சார சூழமையில் இறையருளின் காப்பாளர் என்பதன் பொருள் என்ன? உங்களுடைய மரபில் பெண்ணின் நீதியின் காப்பாளர் என்பதன் உட்பொருள் என்ன?


L.W.F. ன் உறுப்பினர் திருச்சபைகள் பெண்ணின் நீதிக்காக உருவாக்கி பிறரோடு பகிர்ந்து கொள்ளும் வளர்ச்சித் திட்டங்களை கீழக்காணும் துவக்க இறையியல் கருத்துக்களின் ஒளியில் காண்போம். இத்தகைய உரையாடல்களும் முன்னேற்றங்களும் ஆண், பெண் இருபாலருக்கிடையே நிலவும் முழு ஒத்துழைப்பில் நிகழ்கின்றன.

## திருவிவிலியம்: வாழ்விற்கும் வார்த்தைக்கும் இடையேயான உரையாடல்

ஏன் விவிலியம்? விவிலியம் உலகோடு கடவுளின் அருள் பற்றி உரையாடுகிறது, இயேசு கிறிஸ்துவின் வழயாக இறைவன் உலகிற்கு தன் அருளை வாக்களித் துள்ளார் என்பதை கிருத்தவர்களுக்கு லூத்தர் நினைவூட்டினார். ஆகவே லூத்தரன் மரபில் கிறிஸ்துவை கொணர்வது எது அல்லது வேறு வார்த்தைகளில் கடவுளின் பேரருள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதே முழுமுதற் கேள்வியாகும். இதையே நற்செய்தி விளக்குகிறது. முடமான பெண்ணை இயேசு குணமாக்கிய போது அவளுடைய மானிடம் முழுமையாக மீட்கப்படுகிறது, (லூக்கா 13:10–17).

இக்கருத்துக்கள் பெண், ஆண் இருபாலருக்கும் கடவுளின் பேரருள் குறித்த வாக்குறுதியாவது எது? பாலியல் நீதி கண்ணோட்டத்தில் விவிலியப் பகுதிகளை வாசிக்கவும், விளக்கவும் கடவுளின் இறையருள் எவ்வாறு துணைநிற்கிறது? என்ற வினாக்களை முன்வைக்கின்றன.

இன்றைய சூழமையோடு இணைந்து விவிலியச் செய்திகளை விளக்கும் கலையே “விவிலிய விளக்கவியல்”. லூத்தரன் மரபில் அதனுடைய ஆக்கப்பூர்வமான



தற்திறனாய்வு. எதிர் காலத்திற்கு திறந்த மனது கொண்ட நுண்ணறிவுத் திறன்களால் பெரிதும் வழிநடத்தப்படுகிறது. தீர்வுகளை முடக்கும் அழுத்த நிலைகளை அடையாளம் கண்டு கொள்வதே லூத்தரன் இறையியல் கண்ணோட் டத்தின் தனிச்சிறப்பாகும்.

விவிலியத்தை விளக்க உதவும் லூத்தரின் போதனைத் தொகுப்பு உண்டு. கிறிஸ்தவர்கள் (குருகுல மக்கள்) அருட்பணியாளர்கள் என்றும் விசுவாசத்தின் நிலையே எற்புடைமை என்றும், திருச்சட்டமும் நற்செய்தியும் வெவ்வேறனானவை என்றும் கிறிஸ்து மட்டுமே—இறையருள் மட்டுமே—விசுவாசம் மட்டுமே—இறைவார்த்தை மட்டுமே என்றும் வலியுறுத்தப்படுகிறது. மேலும் திருச்சிலுவை பற்றிய இறையியலும், இறைவார்த்தை இறைவார்த்தையை விளக்கும் என்ற விவிலிய விளக்கவியல் கொள்கை யையும் வலியுறுத்துகிறது. மேற்கண்ட வாறு, விவிலியப் பகுதிகளை “கிறிஸ்துவை கொணர்வது எது?” என்ற வினாவின் வெளிச்சத்தில் வாசிப்பது விவிலிய விளக்கவியலில் முக்கியக் கருத்து.

அன்பியங்களாக, சபைகளாக, குழுக்களாக அல்லது தனியாக விவிலியத்தை வாசிப்பது வழியாக அவ்வார்த்தையோடு நெருங்கிய ஈடுபாட்டை ஏற்படுத்தலாம். வார்த்தை யின் வரலாற்றுப் பின்னணியும் நம் வாழ்க்கையின் அன்றாட எதார்த்தங் களையும் வாகிக்கும் கலையே இது. வாழ்விற்கும் வார்த்தைக்கும் இடையே

இருக்கும் அன்பிய சூழமையோடு அன்றாட அனுபவ பன்முகத் தன்மை யானது தொடர்புபடுத்தப்படுகிறது.

ஆகவே விவிலிய விளக்கத்தில் மொழி, வாய்மொழி, வார்த்தை வெளிப்படுத்தலில் வரும் கலாச்சார பன்முகத்தன்மை, கருத்தேற்பு (reception) கேட்போர் கூட்டம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இன்றைய பழக்க வழக்கங்கள், சூழமைகள் இவற்றோடு ஒத்துவரும் விவிலிய விளக்கங்களை மென்மேலும் வளப்படுத்த வேண்டும்.

லூத்தரன் குழுமத்தில் விவிலியத்தை விளக்க பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அவற்றுள், அன்பியத்தையும் வார்த்தையோடு உறவாட (உரையாட) முதற்படிக்கட்டு களாக்கும் சூழமை விளக்கமும், மக்கள் சார்ந்த விளக்கங்களும் முக்கியமானவை யாகும். சட்டத்திற் கும், நற்செய்திக்கும் இடையேயுள்ள கருத்தழுத்தத்தை (concept tension) புரிந்து கொள்ள நீதியின் அமைப்பில் மாற்றங்களைத் தூண்டும் திறனாய்வு முறைகள் மிகவும் முக்கியமானவை யாகும். பெண்கள் வலுவூட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டோருக்கு உரிமைகளை மீட்டுத்தரவும் பாலியல் நீதியை மேம்படுத்தவும் இவ்வகை விவிலிய விளக்கவியல் ஒளியாகவும், சக்தி யாகவும் இருக்கும். சூழமைக் கண்ணோட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மக்களோடும், குழுக்களோடும் இணைந்து விவிலியப் பகுதிகளை வாசித்தல் தலத்திருச்சபையில் உருவாகும் இறையியலை வலியுறுத் தும் ஒரு வலுவூட்டல் செயல்முறை யாகும்.

மக்கள் தத்தம் அன்றாட போராட் டங்களை விவிலிய கதைகளோடு இணைந்து வாசிக்க ஆரம்பித் துள்ளனர். இறைவார்த்தையோடு உருவாகும் இத்தகைய எதிரெதிர் செயல்பாடு (interaction) பாலியல் ரீதியாக தொகுக்கப்படும் அநீதிகளை எதிர்கொள்ளும் ஒரு செயல்நோக்க மாகும். கிறிஸ்தவ மரபிலும், விவிலிய விளக்கங்களிலும் பாலியல் நீதிக்கான இறையியல் அடித்தளங்கள் நிறைந் துள்ளன. உலகின் பல்வேறு தலைமைத் துவத்தில் பெண், ஆண் இருபாலரின் ஒத்துழைப்பை இந்த இறையியல், விவிலிய மரபு உறுதிப் படுத்தினாலும், குடும்ப சூழமை, திருச்சபை, பொதுப் பணியிடங்கள் ஆகியவற்றில் இது நிறைவாக செயல்படுத்தப்படுவதில்லை. பெண்கள் குடும்ப பொறுப்புகளால் பாரம் சுமத்தப்பட்டவர்களாக உள்ளனர். அவர்கள் பொதுப்பணியிடங்களில் தலைமைத்துவத்தை ஏற்க உற்சாகப் படுத்தப்படுவதில்லை. திருப்பணி, திருத்தொண்டிலும் தலைமைத் துவத்திலிருந்து விலக்கப்படுகிறார்கள்.

கடவுளின் முன்பு, திருமுழுக் கினால் பெற்ற பெரிய அடையாளமான படைப்பின் காப்பாளர் என்ற கடவுளின் நியதி மற்றும் ஆணையின் முன்பு மானிடர் அனைவரும் சமமானவர் என்ற புத்தொளியில் பெண்கள் ஒதுக்கப்படுவதை விளக்கும் சில விவிலிய பகுதிகள் மீண்டும் வாசிக்கப்பட வேண்டும். தற்கால சமூகத்தில் மட்டுமல்லாமல் விவிலியப் பகுதிகளிலும் ஆதித்திருச்சபை மரபுகளிலும் இருந்து வந்த கலாச்சார சூழமைப்படுத்துதல் காரணமாக விவிலிய விளக்கவியல், அது எதிர்கொள்ளும் சவால்களை எளிதாக எதிர்கொள்ள முடிவதில்லை. இன்றைய திருச்சபையிலும், சமூகத்திலும் பெண்–ஆண் இவர்களுக்கிடையே நிலவும் சமத்துவமின்மையை வெளிப்படுத்த பாலியல் பகுப்பாய்வை பயன்படுத்தி விவிலியப் பகுதிகளை சூழமைபடுத்தி வாசித்தல் ஒரு சிறந்த விவிலிய விளக்கவியல் முறையாகும். மூதாளர் (patriarchy) சமூகத்தில் இருந்தது போல மானிடரில் ஒரு பங்கினரை ஆதரித்து மற்றொரு பங்கினரை ஒடுக்கும் அமைப்புகளை நிரந்தரப்படுத்தும் கருத்துக் கோட்பாடுகளைக் களைய விவிலியப் பகுதிகளை திறனாய்வு கண்ணோடு வாசித்தல் வேண்டும். பெண்–ஆண் இருபாலரின் உருமாற்ற, நீதியான உறவுகளை நோக்கியும், இளைஞர்–ஆடவர், இளம்பெண்கள்–பெண்கள் ஆகியோரின் கூட்டுப் பங்காண் மையை நோக்கியும் விவிலியத் திறனாய்வு அமைந்துள்ளது. இச்சமூகம் சார்ந்த உறவுகள் நீதியும் மாண்பும் உருவெடுக்கும் தெளிவான வெளிப்பாடுகள் ஆகும்.

* நீதி பற்றி விவிலியம் கூறுவது என்ன?
* பாலியல் நீதியை வலியுறுத்தும் விவிலியப் பகுதிகள் எவை?
* பெண், ஆண் சமமான உறவு களுக்கு சவால்களாக, தடைகளாக

அமையும் பகுதிகள் எவை?

- இவ்விவிலியப் பகுதிகளை வாசிப்பதில் இறையருள் எத்தகைய பொருளை (அர்த்தத்தை) கொண்டுள்ளது?

## ஏற்புடையமையும் இறையருளும் ; எல்லா மானிடரின் சுதந்திரம், மாண்பு

- ஏற்புடைமை உணர்வு என்றால் என்ன?
- ஒவ்வொரு தனிமனிதரும் ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவும் அதே சமயத்தில் குற்றவுணர்வு கொண்டவராகவும் உள்ளார். எவ்வாறு?
- தனிமனிதரும், திருச்சபையும் ஒரே சமயத்தில் ஏற்புடைமை உள்ளவரா கவும் குற்றவுணர்வு உள்ளவராக வும் இருப்பதின் விளைவுகள் என்ன?

லூத்தரின் தனித்தன்மையை நிலைநிறுத்தும், "விசுவாசத்தினால், இறைவனின் பேரருளால்" என்ற விவிலிய இறையியல் கருத்தோடு பிணைக்கப்பட்ட நீதி என்னும் அடிப்படைக் கருத்து ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு முன்மொழியப்பட்டதே இவ்விறையியல் அணுகுமுறை. ஏற்புடைமை என்பது, நம்மை பிணைத்திருக்கும் எல்லா தளைகளிலிருந்தும் விடுதலை பெறுவதே (உரோமையா 5).

ஏற்புடைமையை ஆணி வேர்களாகக் கொண்ட இவ்விறை வியல் அணுகுமுறை, இன்னும் மேற்பதவி, அநீத சட்டங்களால் காக்கப்படும் அநியாய அமைப்புகள் இவற்றை அடையாளம் கண்டு கொள்கின்றது. மூதாளர் மரபுகளை, மதிப்பீடுகளை நிறைவு செய்யும் புகழ்த்தகுதியுடைமை (meritocracy) இவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டவர் களாக வாழ்வதே ஏற்புடைமையின் இறையருள். எனவே, நாம் அனைவரும் ஒரே சமயத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டவர்களாகவும், பாவிகளாகவும் வாழ்கின்றோம். லூத்தரன் கண்ணோட் டத்தில் திருச்சபையும் சமூகமும் இத்தகைய முரண்பாடான சூழமையில் தங்களைத் தாங்களே காண்கின்றனர். விசுவாசத்தின் தூண்டுதலால் வழிநடத்தப்படுதல் என்பது பெண், ஆண் இருபாலரும் மாற்றத்திற்கான ஈடுபாட்டில் வலுவேற்றப்பட்டிருக் கிறார்கள் என்பதாகும். மானுடமானது படைப்பில் மட்டுமின்றி பாவத்திலும் சமானவர்களாக இருக்கின்றனர். அவ்வாறே மனிதருள் ஒருவரும் நீதிமானாக இல்லை... ஏனெனில் அனைவரும் பாவம் செய்து கடவுளின் மகிமையை இழந்துள்ளோம். (உரோமையர் 3:10,23) என்று பவுலடியார் கூறுகிறார். தனிமனிதனின் செயல்களாக பாவத்தை நாம் அறிந்து கொண்டாலும் குழுக்களும் நிறுவனங் களும் தங்களை தாங்களே திறனாய்வு செய்து கொள்ள வேண்டும்.

பிறருக்கும், நமக்கும், கடவுளுக்கும் தீமை செய்வதே பாவமாகும். கடவுளின் படைப்பை பங்கப்படுத்தும் சட்டங்கள், பழக்கங்கள், கருத்துகள், மனப்பான்மைகள், கொள்கைகள் அனைத்துமே பாவமாகக்கூடும். எனவே பாவம் என்பது தனிமனிதனை மட்டுமின்றி, அமைப்பு நிறுவனங்களையும் சார்ந்ததாகும். மனிதரில் ஒரு சாராரின் மதிப்பீடுகளை மற்றொரு சாராருடைய மதிப்பீடு களுக்கு மேல் நிர்ணயிக்கும் அனைத்துமே பாவமாகும். ஏனெனில், மற்றவரை குறைத்து மதிப்பிடுவது எப்போதுமே தீமையானது. ஒருவகை யில் பெண்களின் மதிப்பீடுகளுக்கு மேல் ஆண்களின் மதிப்பீடுகளை திணித்து, பிறரை அடக்கி ஒடுக்கும் எந்த ஒரு அமைப்பும் பாவமான அமைப்பாகும். அடக்குமுறையான பாவ அமைப்பு பற்றிய தெளிதல் பாவம் பற்றிய வாதக் கருத்துக்களுக்கு கொடுக்கக்கூடிய எளிதான விடை களைத் தவிர்க்கச் செய்யும். ஒரு அமைப்பில் வாழ்தல் என்பது, அவ் வமைப்பின் அநீதத்தை மேற்கொள்ளக் கூடிய ஆண், பெண் இரு பாலரின் பொறுப்புணர்வை சுட்டிக்காட்டுகிறது. ஒரு பாவ அமைப்பானது, பெண், அண் இருபாலரின் மனித மாண்பை இழக்கச் செய்வதால் மாற்றம், உருமாற்றம் என்கிற இயக்கங்களில் ஈடுபடுவது அவர்கள் பகிர்ந்து கொள்ளும் அமைப்பாகும். ஆகவே பாலியல் நீதியென்பது பெண், ஆண் ஆகிய இருபாலரும் நீதி, பகிர்தல் என்ற அடிப்படையில் வாழ்க் கையை அமைத்து கொள்ளுதலாகும்.

இறையருள் வழியாக, விசுவாசத்தினால் ஏற்புடைமை என்பது, கிறிஸ்தவ வாழ்வை இவ்வுலகிலே மாற்றி திருச்சபையை அநீத அமைப்புகளுக்கு எதிராக குரல் எழுப்பச் செய்வதாகும். திராட்சைத் தோட்டத்து ஊழியர் உவமையில் (மத். 20:1–16) இறையருள் எல்லாப் பணியாளர்கள் மீதும் பொழியப்படுவதால் மானிடம் அங்கு மீட்கப்படுகிறது. இவ்வாறு இறைவன் தரும் மீட்பில் எல்லோரின் மானிடமும் சமமானதே.

- ★ தாங்கள் அனைவரும் சமமாக பாவிக்கப்பட்டதால், இவ்வழியாக தங்களுடைய வாழ்வில் எத்தகைய மாற்றங்களை நிகழத்துவார்?
- ★ எல்லோரும் இறையருளால் மீட்கப்படின் ஒரு அன்பியம் எவ்வாறும் மாற்றம் பெறுகிறது?

## கடவுளின் மானிடம் : உருவாக்கமும் நீதியும்

- ★ கடவுளின் உருவாக்கம் இயேசு கிறிஸ்துவிலும் நீதியிலும் எவ்வாறு தொடர்படைகிறது?
- ★ நீதிக்கும் மானுடமைக்கும் நிலவக்கூடிய தொடர்புகள் எவை?

ஒரு மனிதனின் தசையில் கடவுள் முழுமனித வாழ்வில் பங்குகொண்டார், கடவுள் யாரென்று காட்டும் இயேசு கிறிஸ்துவில் எல்லா மனிதரையும் சந்திக்கின்றார்: அடிமைத்தளை



யிலிருந்து எல்லா மக்களையும் விடுவிக்க விரும்பும் கடவுள் / பாவத்தில் வீழ்ந்த உலகின் பிடியில் இருந்து விடுவிக்கும் கடவுள் / ஏழைகளையும், ஒடுக்கப்பட்டோரையும் வலுவூட்டி எல்லா மக்களையும் கடவுளின் குழந்தைகளாக்கும் விடுதலை வாழ்வு வாழ அமைப்பு விடுக்கும் கடவுள்.

தம்மை நோக்கி கதறி அழுவோரை விடுவிக்க அவர்களின் குரலைக் கேட்டு இறங்கி வரும் கடவுள் அனுபவமே இது (விடுதலைப் பயணநூல் 2:24, 3:7). ஆண் ஆளுமை கொண்ட குடும்பம் என்ற புதிய அமைப்பினுள் இயேசு தம் சீடர்களை அழைத்துக் கொண்டார் (மாற் 3:35). இயேசு கிறிஸ்து வழியாக நிகழ்ந்த கடவுளின் மனுவுருவில் மனித உடலானது, இன்ப துன்பம் என்ற அதனுடைய எல்லா எதார்த்தங் களோடும் கிறிஸ்தவ வெளிப்பாட்டின் மையமாகிறது. இறைவார்த்தை, மனுவுடலில் அவதாரம் எடுத்து நம்மோடு வாழ்கிறது. (யோவான் 1:4). தூய ஆவியால் வலுவூட்டப்பெற்ற கிறிஸ்துவின் இம்மறையுடலானது, எல்லா சகோதர சகோதரிகளை இணைக்கும் ஒரு புதிய நீதியான சமூகமாகும். இன்றைய இச்சமூகமே, கிறிஸ்துவின் உடலான திருச்சபை யாகும் (1 கொரிந்தியர் 12:26–27).

உலகில் நீதியைக் காணுமாறு செய்ய திருச்சபையை தூய ஆவி வலுவூட்டுகிறது. நீதியே திருச்சபை அமைப்பின் தனி அடையாளமாகும். நிறைவு காலத்தில் திருச்சபையும், படைப்பும் எவ்வாறு இருக்குமோ அவற்றின் ஒரு பகுதியை இன்றைய திருச்சபை வாழ்வில் மானிடம் கண்டுணர்கிறது.

விடுதலையாக்கும் நீதியானது, தன்னை வெளிப்படுத்த இறையருள் இவ்வுலகினை ஒரு அரங்காக உருவாக்குகிறது. ஆகவே, காழ்ப்பு ணர்வையும், வன்முறையையும் துன்ப துயரத்தில் சகித்து வாழும் எல்லோருக்கும், நீதி எவ்வாறு, எத்தகைய வடிவில் வெளிப்படுத்தப் படும் என்பதை ஆழ்ந்துணர்ந்து அறிவிப்பதே திருச் சபையின் இறைவாக்குப் பணியாகும். இதுவே திருச்சபையை எல்லா உறவுகளிலும் நீதியோடு ஆக்கப்பூர்வமாக ஈடுபட ஆற்றல்படுத்துகிறது. உங்களுடைய சூழமையில் கடவுள் மனுவுருவானதை எத்தகைய பிம்பம் / உருவங்களில் நீங்கள் காண்கின்றீர்கள்?

- கடவுள் மனுவுருவாதலைக் காட்டும் பிம்பங்கள், உருவங்கள் எவ்வாறு பெண்–ஆண் இருபால ருக்கும் இடையே நிலவும் நீதியுணர்வோடு தொடர்புபடுத்தப் படுகிறது? அல்லது கடவுளின் மனுவுருவாதல் எவ்வாறு பெண், ஆண் இவர்களிடையே நிலவும் நீதியுணர்வோடு தொடர்புபடுத்தப் படுகிறது?

## திருவருட்சாதனங்கள் : உள்ளடக்கிய வட்ட மேஜையில் பணிபுரியும் சுதந்திரம்

- திருவருட்சாதனங்களில் எத்தகைய சுதந்திரத்தை / விடுதலை யுணர்வை கடவுள் நமக்கு வாக்களிக்கிறார்?
- திருவிருந்தைக் கொண்டாடும் போது கிறிஸ்துவின் மறையுடலில் எத்தகைய பன்முகத் தன்மையை (பன்முக உருவங்களை) நீங்கள் கண்டுணர்கின்றீர்கள்?

திருமுழுக்கு வழயாக ஒவ்வொரு மனிதரும் இயேசவின் மறையுடலில் ஒரு பாகம் ஆகிறார் (1 கொரி. 1:12). தூய ஆவியால் பல்வேறு கொடைகள், திறன்கள், ஆற்றல்கள் கொடுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொருவரும் முக்கிய மானவரே. இயேசு ஒதுக்கப்பட்ட வரோடும், ஒடுக்கப்பட்டவரோடும், தேவையிலுள்ளோரோடும் பந்தியில் பங்கு கொண்டார். அவர்களோடு அப்பம் பிடுகையில் அவர்களை வலுவூட்டினார். அப்பம், ரசத்தின் மூலம் அப்பந்தியில் பங்கு கொண்டு, நாம் அனைவரும் சமமானவர் என்றும், நமது ஒன்றிப்பு இறையருளால் நிகழ்ந்தது என்றும் அடையாளம் கண்டுகொள்கின்றோம். இயேசு கிறிஸ்துவில் எல்லோரும் பாவமன்னிப் பும், புதுவாழ்வும் பெறுகின்றனர். ஆகவே பெண், ஆண் இவர்களுக் கிடையே அல்லது மக்களுக்கிடையே அல்லது சுற்றுச் சூழலுக்கு இடையே

ஆதிக்கம், பாரபட்சம், அடக்குமுறை இவற்றை எவ்விதத்திலும் அங்கீகரிக்க இயலாது. கலாத்திலும், கொரிந்திலும் "எனவே" இனிமேல் ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை (கலா 3:26–28, 1 கொரி 12:13) என்று பவுலடியார் அத்திருச்சபைகளுக்கு போதிப்பதை அறிவோம்.

பாலியல், உடலியல் கூறுகள் அல்லது பிற காரணங்களை புறந்தள்ளி மனுக்குல மானது, முழுமையாக இயேசுவின் அருள், மன்னிப்பு, புதுவாழ்வு ஆகிய வற்றால் உருமாற்றம் பெற்றுள்ளது. மனித இனப்பிரிவு, வகுப்பு, பால் என்பவைகளை வைத்துக் காட்டப்படும் அதிகார வேற்றுமைகள், திருமுழுக்கினால் மாற்றம் பெற்றுள் ளன. எல்லோரும் கிறிஸ்துவில் ஒன்றே.

"சுதந்திரத்திற்கு கிறிஸ்து நம்மை விடுவித்துள்ளார் என்று பவுலடியார் கலாத்தியரை நினைவூட்டுகிறார் (கலா. 5:1). எல்லா விசுவாசிகளின் திருநிலைப்பாடு என்பது எல்லோரும் விடுதலையாக்கப்பட்டுள்ளனர் என்று மட்டும் இல்லாமல் இறையரசின் விடுதலை வாழ்வினால் எல்லோரையும் ஒன்றிணைக்க ஆவியினால் அழைக்கப்பட்டவர் என்றும் பொருள் கொள்ளலாம். பாரபட்சம், ஒடுக்குமுறை இவைகளால் புறந்தள்ளப்பட்டவர்களை ஆற்றல் படுத்தவும், கொடைகளைப் பகிர்ந்து கொண்டு முடிவெடுத்தலில் பங்கு கொண்டு, ஒருவரையொருவர் பராமரித்து வாழ சமத்துவமான ஒரு அன்பியத்தை உருவாக்கவே இச்சுதந்திரம் உதவுகிறது. கிறிஸ்தவ சுதந்திரம் / விடுதலையின் ஒரு வெளிப்பாடே பாலியல் நீதியாகும். திருச்சபையை பொறுத்தமாட்டில், வாழ்விலும் நிறுவனங்களிலும் பாலியல் நீதியைக் காட்டியெழுப்ப முக்கிய காரணிகளான, பங்கேற்பு அமைப்புகள், ஒளிவுமறைவின்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை உருவாக்க ஆண், பெண் இருபாலருக்கும் சரிநிகரான பொறுப்புண்டு.

* திருமுழுக்கும், திருவிருந்தும் எவ்வாறு புதிய வாழ்க்கை முறைகளை கொண்டு வருகின்றன?
* உங்களுடைய சூழமையில் தலைமைத்துவப் பகிர்வின் செயல்பாடுகள் யாவை?

## திருச்சபை தூண்கள் : தலைமைத்துவப் பகிர்வும் சமமானவர்களின் சீடத்துவமும்

* திருமுழுக்கு எத்தகைய வழிகளில் தலைமைத்துவத்தையும், சீடத்துவத்தையும் பாதிப்புக்கு உட்படுத்துகிறது?
* திருச்சபையாக நாம் பெண்களின் தலைமைத்துவம் குறித்த முரண் பாடான விவிலியப் பகுதிகளை எவ்வாறு எதிர்கொள் கிறோம்?

திருமுழுக்கு வழியாக பெண்ணும், ஆணும் கடவுளிடம் மீட்டுக் கொடுக்கப்படுகிறார்கள். இருபாலரும், ஒரே நிலையில் பாவிகளாக இருந்தா



லும் கடவுளால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். அதாவது, நம்முடைய பாவத்திலும் ஏற்புடைமையிலும் கடவுளின் திருமுன் நாம் ஒரே நிலையில் இணைந் துள்ளோம். பாலியலின் காரணமாக எவரும் கடவுள் திருமுன் மற்றொரு வரை விட சலுகை பெற்றவரல்ல. ஆணோ, பெண்ணோ, என்ன செய்துள்ளோம் அல்லது எப்படி இருக்கிறோம் என்பதால் அல்ல மாறாக கடவுளின் பேரருளால் மட்டுமே ஏற்புடையவர்களா கிறோம்.

நம்முடைய மரபுகளின் பாதிப்பி னால் உருக்கொடுக்கப்பட்ட (பாதிப்பிற் குட்படுத்தப்பட்ட) பல்வேறு பணிநிலை களில் வேறுபாடுகள் இருப்பினும், மனித வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் பகிரும் உருவாக்கும் பிம்பங்களே மனதிற்கு கொள்ளப்பட வேண்டும். ஆணுக்கு ஏற்ற துணை (தொ,நூ 2:18) என்ற பகுதியானது சிலரால் ஆண்களுக்கு கீழான நிலையில் பெண்கள் உள்ளனர் என்று விளக்க முற்பட்டாலும், துணை என்ற சொல்லை இன்னும் ஆழமாக, ஒருவருக்கொருவர் கொடுக்கும் பாதுகாப்பு என்று விளக்கும்போது, ஒரு பாலினத்தை ஒன்னொரு பாலினத் துக்கு கீழ்நிலையாக வைப்பதை விவிலிய மரவு ஆதரிக்கவில்லை என்று காண்கின்றோம். ஏனெனில், விவிலியத்தில் இறைவனையே “துணை” என்ற சொல்லால் அழைப் பதைப் பார்க்கின்றோம். எடுத்துக்காட் டாக, மலைகளை நோக்கி கண்களை உயர்த்துகின்றேன். எங்கிருந்து எனக்கு உதவி (துணை) வரும்? எனக்கு உதவி (துணை) விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவரிட மிருந்தே வரும் (தி.பா. 121:1–2). இங்கு, பெண் ஆணின் துணை. எபிரெயத்தில் “Ezer” என்ற வார்த்தையே திருப்பாடல் 121–ல் ஆண்டவரைச் சார்ந்திருப்பதை விளக்கும் வார்த்தையாகும். இத்தகைய தெளிதலில் துணையாளர் என்பதை கீழ்ப்பணியாளர் என்று பொருள் கொள்ளாது பரஸ்பர சார்புத்தன்மை யாக எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

பெண்கள் சபைகளில் அமைதி காக்க வேண்டும் (1 கொரி. 14:34). விவிலிய ஆய்வுகள் இப்பகுதியை பவுலடிகளார் எழுதவில்லை என்றும் பெண்களை திருச்சபையிலிருந்து ஒதுக்க விரும்பிய சிலரால் பிந்தைய காலக்கட்டத்தில் உட்சொருகப்பட்டது எனக் காட்டுகின்றன. இறைவாக் கினரை பற்றிய பகுதிகளிலும், ஒருவர் மட்டுமே ஒரு சமயத்தில் பேச வேண்டும் என்றும் அவ்வாறு பேசுகை யில் முந்தையவர் அமைதிகாக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (1 கொரி 14:30). ஆகவே கொரிந்தி யருக்கான திருமடலில் பெண்கள் அமைதி காக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் சட்டம் அல்லது படைப்பு ஒழுங்கு ஆகியவற்றைக் கொண்டு தலத்திருச்சபைகளில் உள்ள சிக்கல்களை களைய முற்பட்டாலும் வழிபாட்டுக் கூட்டங்களை முறைப் படுத்தல் என்ற பரந்த சூழமையில் இப்பதிகுகளைக் காண வேண்டும். பவுலடியாரின் திருச்சபைகளில் பெண்கள் அமைதி காக்க வேண்டும் என்ற நெறிமுறை போதனையானது, சூழமையினால் உருவாக்கப்பட்டதாகும். அவரே பெண்கள் பொது இடங்களில் பேசுவதை (1 கொரி 11:5) ஏற்றுக் கொள்வதால் இதை எல்லாக் காலத் திற்கும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொது விதியாக புரிந்துகொள்ள முடியாது. இவ்விரு பகுதிகளுக்கு மிடையே ஒரு கருத்தழுத்தம் (Ideological tension) உள்ளது தெளிவாகிறது. இது விவிலிய காலக்கட்டத்திலும் இன்றும் விவிலிய விளக்கத்தின் திறவுகோலாக சூழமை விளங்குகிறது என்பதைக் காட்டு கிறது,

எழுதப்பட்ட வரலாற்றுச் சூழமை காரணமாக, புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் பாலின சமத்துவத்தை ஒருமித்த வகையில் ஆதரிப்பதில்லை. பாலின படிநிலை அமைப்பை எடுத்துக் கொள்ளும் விவிலியப் பகுதிகளை (எடுத்துக்காட்டாக “பெண்கள் கணவ ருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற கருத்து” – எபேசியர் 5:21–24, கொலோ 3:18) இயேசுவின் போதனை மரபு, பவுலடியாரின் திருமடல்கள் மரபு போன்றவற்றின் ஒளிகொண்டு திறனாய்வு கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்ய வேண்டும்.

தலைமைத்துவத்திலிருந்து பெண்களை ஒதுக்குதல் விவிலிய வழி, திருச்சபை மரபு ஆகியவற்றின் போதனைகளுக்கு முரண்பாடானவை என்று உறுதிப்படுத்த இயலுமா? பெண் பணியாளர்கள் பழைய புதிய

ஏற்பாட்டுக் காலங்களில் சிறந்து செயல்பட்டுள்ளனர். மோசே ஆரானோடு இணைந்து இறைவாக்கினளான மரியம் செயல்பட்டார் (வி.ப. 15:20). தெபோராள் ஒரு சமய சமூக தலைவியாகச் செயல்பட்டார். (நீதி. 1:4). இறைவாக்கினள் அன்னாள் இயேசுவின் மேசியா தன்மையை ஆலயத்திலே உறுதிப்படுத்தி அவரை ஆசீர்வதித்தார். (லூக்கா 2:36). இயேசு பல பெண், ஆண் சீடர்களைக் கொண்டிருந்தார். பெண் சீடர்களில் பலர் இயேசுவின் பொருளாதாரத் தேவைகளை நிவிர்த்தி செய்தனர். (லூக்கா 8:2–3) இவர்களில் பல பெண்கள் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தனர். (லூக்கா 24:23. யோ 20:11–18). உரோமையர் 16–ல் அப்போஸ்தலர் யூனியா (உரோ 16:7), பிரிஸ்கா என்பவர் போன்ற உடனுழைப் பாளிகளுடன் திருச்சபை யில் பல்வேறு பணிகளையும் பொறுப்புகளையும் கொண்ட பல பெண்கள் உரோமையா 16–ல் குறிப்பிடப்படுகின்றனர். இப்பெண்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவச் சமூகங்களில் பல்வேறு தலைமைத் துவப் பொறுப்புகளை வகித்தனர். கிறிஸ்துவிற்கு தளராத சான்று பகர்ந்து கொடுந்துயர் அனுபவித்த பலப் பெண்களை திருச்சபை வரலாற்றில் காண்கிறோம். (எடுத்துக்காட்டாக பெர்பெத்துவா, பெலிசித்தா).

ஆண்மை, பெண்மை என்னவென்ற மரபு விளக்கங்களையும், விதியமைப்புகளையும், சமூகக்கூறுகளையும் திருச்சபை விளக்குகிறது. திருச்சபையின் செயலற்றத்தன்மையும் மௌனமும் அதனுடைய சிக்கல் தன்மையின் செயல்களாகும். பெண்ணையும், ஆணையும் சமூக கலாச்சார நியதிகளின் ரீதியில் ஒதுக்கும் செயல்முறைகளை மாற்றும், ஒவ்வொரு மனிதனின் மாண்பையும், வளமையையும் மேம்படுத்தும் இறையியல் வளங்களை திருச்சபை இது காணும் பயன்படுத்தாதுள்ளது.

- ⋆ திருச்சபை, சமூகத்தில் உள்ள எதிர்மறை, கலாச்சார சமூக நியதிகளை நிரந்தரப்படுத்தும் முரணியலான விவிலியவிளக்கங்களை திருச்சபை எவ்வாறு கையாளுகிறது?
- ⋆ விவிலியப் பகுதிகளின் அடிப்படையில், திருச்சபை சூழலில் பாலியல் நீதி செயல்முறைகளை எங்கு, எப்படி காண்கிறோம்?

## சூழமைப்படுத்தப்பட்ட செயல் திட்டங்களுக்கான வழிகாட்டியும் உதவிகளும்: வழிநடத்துதலும் பொறுப்புடைமையும்.

திட்டமிட்ட பணிகளைப் பொறுத்த மட்டில் நிறுவனமயமாக்கப்பட்ட தொடர் செயற்பணிகளுக்கும் வழிநடத்துதலுக்கும் குழுமத்தின் அலுவலகம் பொறுப்பாகிறது. சங்கத்திற்கு பொதுச் செயலாளரால் மேம்பாட்டு வளர்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லா லூத்தரன் அன்பியங்களிலும் பாலியல் பணிகளுக்கான, செயல் முறைக் காரணிகளை L.W.F. பாலியல் நீதிக்கொள்கையின் இப்பகுதி தருவித்து வழங்குகிறது. சில செயல் முறை காரணிகள் பரிந்துரைக்கப் படுகின்றன. உறுப்பினர் திருச்சபைகளிலும், குழும அலுவலகத்திலும், உலகளாவிய பணி நிகழ்வுகளிலும் இன்னும் எல்லா நிலைகளிலும் பொறுப்புகளையும், பதவிகளையும் எல்லோரும் பகிர்ந்து மேம்படுத்த இக்காரணிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

2012–2017க்கான L.W.F.ன் திட்ட அறிக்கையின்படி, எல்லா நிலைகளிலும் பாலியல் நீதியை நிறைவு செய்ய எல்லா மனிதரின் மாண்பு, நீதி என்ற மதிப்பீடுகளையும் பன்முகத் தன்மைக்கு மதிப்பையும், உள்ளடக்குத் தன்மையையும், பங்கேற்பையும், ஒளிவு மறைவின்மையையும், பொறுப்புடைமையையும், வலியுறுத்தி, இவைகளில் தம்மையே ஈடுபடுத்திக் கொள்கிறது.

பாலியல் நீதியை செயல்படுத்த கீழே செயல்முறைத் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1. சூழமை மதிப்பிடுதல்:–

(எந்த இறையியல், மனிதவியல் அல்லது வளர்ச்சித்திட்ட இடையீட்டில் பகுத்துணர்வும் வெவ்வேறுச் சூழமைகளை அடையாளம் காண்பதுமே முதற்படியாகும்). திட்டமிட்ட ஒரு பணியை வழிநடத்த, நிறுவனக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக எந்த



ஒரு கொள்கையையும் உருவாக்க, செயல் அணுகுமுறையானது, பெண், ஆண் இவர்களின் அனுபவங்களுக்கும் இவர்களை பாதிக்கும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார சூழமைகள் இவைகளுக்கும் செவி மடுக்க வேண்டும். சூழமை மதிப்பிடுதல் என்ற செயல்முறையில், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பாலியல் அநீதிகள் பெண்களுக்கு எதிராகவே செய்யப்படுகிறது என்பதை கருத்தில் கொள்வது அவசியம். எனவே, பாலியல் நீதியை நிலைநாட்ட ஆண்களோடு சமநிகர் பங்காளிகளாக பெண்கள் உள்ளார்கள் என்பதும், அவ்வாறு செயல்பட அவர்கள் வலுவேற்றம் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. அனுபவங்கள், சமூக, கலாச்சார பின்னணியில் உருவாகின்றன.

பற்சமயங்களில் சமமற்ற அதிகார உறவுகள் இவ்வனுபவங்களை பாதிக்கின்றன. பாலியல் பகுப்பாய்வு மூலம், இவ்வுறவுகளை வெளிப்படையாகக் கூறுதலும், கூர்ந்தாய்தலும் சூழமை மதிப்பீட்டில் பயனுறுதியுள்ள செயல்முறைகளை உருவாக்க உதவுகிறது,

## பாலியல் பகுப்பாய்வு விளக்கம்:–

* பெண், ஆண் இருபாலருக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளை அறிந்துகொள்ள ஒரு காரணி.

* சமூக, பொருளாதார, அரசியல், சமய, சமத்துவமின்னை, அநீதி

இவைகளுக்கு வித்தாகும் இவ்வேறுபாடுகளை ஆய்வு செய்தல்.

* சமூகப்படிநிலை, உடலியல் தேவைகள், பொருளாதாரச் சூழமை, இன, பாலின தனித்தன்மைகள் ஆகியவற்றை பாலின நடுநிலையை அடையும் செயல் திட்டத்தின் ஒரு பகுதி என்பதை மனதிற்கொண்டு, பாலியல் ரீதியாக நிகழும் பணிப்பங் கீட்டையும், ஆண், பெண் ஆளுமை விளக்கங்களையும் அடையாளம் கண்டு கொள்ள பாலியல் பகுப்பாய்வு ஒரு காரணியாகும்.

சமமற்ற அதிகார உறவுகளை பெண்கள் ஆண்களுக்கிடையே நிலவும் நீதியான உறவுகளாக மாற்றுவதே பாலியல் பகுப்பாய்வின் உறுதி செய்யப்பட்ட விளைவாகும். எனவே, கீழ்க்காணும் தேவைகள் எழுகின்றன.

1. பொதுச் சூழலிலும், தனியார் சூழலிலும் பாலியல் சார்ந்த சமத்துவமின்மையை அடையாளம் கண்டுகொள்ள, பாலியலில் ஒன்றிணைக்கப்படாத எதிர்மறை யான ஆதாரக் கூறுகளை ஒன்று சேர்த்து பகுத்தாய்வு செய்ய வேண்டும்.
2. திட்டங்கள், இடையீட்டுச் செயல்கள் இவைகள் புள்ளியியல் ஆய்வு வழியாக வரும் முடிவு களைச் சார்ந்திருக்க வேண்டும்,
3. சமத்துவமின்மையை நீக்கி, சமத்துவச் செயல்களை ஊக்கு விக்கும் கொள்கை, மேலாண்மை முடிவுகளைத் தெரிவிக்க, வளங்களையும், நலன்களையும் பாலியல் சார்ந்த கட்டுப்படுத்துதல், உபயோகப்படுத்துதல் ஆகிய வற்றை பகுத்தாய்வு செய்ய பாலியல் பகுப்பாய்வு காரணிகளை பயன்படுத்த வேண்டும்.

## பங்கெடுப்பு அணுகுமுறை:–

பாலியல் சார்ந்த ஒடுக்குமுறை களை அவசர ரீதியாக எதிர்கொள்ள வேண்டும். திருச்சபைகளிலும், சமூகங் களிலும் மூதாளர் அணுகுமுறையை யும், உள்ளடக்கு முறையற்ற நிலையை யும் எதிர்த்துரைக்கும் பாலியல் நீதிச் செயல்களையும், பாலியல் வாதச்செய்தி களுக்கு இட்டு செல்லும் வாதங்களை யும் ஊக்குவிக்க வேண்டும்.

உரையாடலுக்கும் மாற்றம் நிகழவும், புதிய கூட்டுப்பங்காண் மையை நிறுவுதலும், நிலவும் கூட்டுப் பங்காண்மைகளை திடப்படுத்துதலும் இன்றியமையாதவை. பாலியல் நீதியை நிறைவான இறைபணியின் அடிப் படைத் தேவை என்பதை உணர்த்த அன்பியங்கள், குடும்பங்கள் உறுப்பினர் திருச்சபைகள் L.W.F.ன் எல்லா அங்கங்கள் எல்லா சமய நல்லிணக்க அங்கங்கள் ஆகியவைகளுக்கிடையே நிகழும் உரையாடல் மிக முக்கியமான தாகும். செயல்முறை நிலையில் நிகழச்சிகள், திட்டங்கள் உறுப்பினர் திருச்சபைகளின் செயல்பாடுகள் இவைகள் மூலமாக பங்கேற்பு உறுதி செய்யப்படுகிறது:

1. பெண்களையும், ஆண்களையும் ஒன்றிணைத்துக் கொண்டுவர சூழமைகளை உருவாக்க வேண் டும். இதன் மூலம் அவர்களின் கருத்துக்களையும், உணர்வுகளை யும் ஆழ்ந்து கேட்டு, கவனமாகச் சிந்தித்து அவர்கள் அனுபவங் களையும், அவர்களுடைய இலக்கு களையும் பற்றிய தெளிதல் கொண்டு வர வேண்டும்.
2. பெண்களுக்கும் ஆண்களுக்கு மிடையே, கூட்டுப்பங்காண்மை யையும் முரண்பாடுகளைக்களை யும் முறைகளையும், காரணிகளை யும் உருவாக்கிட வேண்டும்.
3. திட்டச் செயல்களிலும் நிகழச்சி களிலும், பெண் ஆண் இவர் களின் அன்றாடத் தேவைகளையும், ஆர்வங்களையும் நிவிர்த்தி செய்திடல் வேண்டும்:

## பாலியல் நீதியை முதன்மையாக்குதல்:–

அடிப்படையில் பாலியல் நீதியை முதன்மையாக்குதல் என்பது ஒரு சக அமைப்பு சார்ந்த தீர்மானமாகும். ஒவ்வொரு செயல்பாடு, அமைப்பு, திட்டம், பாலியல் நீதிக்கு பொறுப்புடைய தாகின்றது என்று பொருள் திட்ட மிடுதல், செயல்படுத்தல், கண்காணித் தல் ஒப்புவித்தல், திறனாய்வு செய்தல் போன்ற எல்லாச் செயல்பாடகளிலும் ஒவ்வொரு நிறுவனமும் பாலியல் நீதியை கணக்கிற்கொள்ள வேண்டும். தீர்வுகள் எடுக்கும் வழிமுறைகளில்

பாலியல் பகுப்பாய்வை முக்கிய அம்சமாக எடுத்துக்கொண்டு அமைப்பு களில் மாற்றம் உருவாக்குதலை வலியுறுத்த வேண்டும்.

"பெண்ணும், ஆணும் சரிநிகராக பயன்பெறவும் சமமின்மையை தடுத்து நிறுத்தவும் எடுக்கப்படும் ஒவ்வொரு திட்டமிட்ட செயல்களிலும் பெண், ஆண் திறமைகளை, தனித்தன்மை களை முழுமையாக சீர்தூக்கிப் பார்க்கும் செயல்பாடே பாலியல் முதன்மைச் செயல்" என்ற ஐக்கிய நாடகளின் பாலியல் முதன்மைச் செயல் பற்றிய விளக்கமானது 1997ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட Ecosoc தீர்மானங் களில் இடம்பெறுகிறது,

## பாலியல் நீதியை அன்பியங்களில் முக்கியமாக்க சில படிகள்:–

1. நிகழ்வுகள், திட்டச்செயல்கள், சட்டக் கோப்புகள், மனித மேம்பாட் டுக் கொள்கைகள், மொழிக் கொள்கைகள் இவற்றை பகுப்பாய்வு காரணிகளாக பயன் படுத்தி, நமது திட்டங்களையும், செயல்பாடுகளையும் கையிருப்புக் கடித்தல் வேண்டும்.
2. பாலியல் உணர்வுக்குறியீடுகளை விளக்கி பெண்–ஆண் இவர் களின் தூண்டுதல் திட்டங்கள் இவைகளின் தாக்கத்தை அளவிடுதல் வேண்டும்.
3. நிறுவனத்தில் செயல்முறையைக் கண்காணிக்கும் / வழிநடத்தும் நபர்களையும் குழுக்களையும் மையப் படுத்திக் காட்டல் வேண்டும்.
4. பாலியல் நீதிக்கான இறையியல் சிந்தனைகளை ஊக்குவிக்க வேண்டும்.

## திறன் மேம்பாடு:–

தலைமைத்துவத்திலும் தீர்வுகள் எடுப்பதிலும் முழுமையாக பங்கெடுக் கும் வாய்ப்புகளை ஆண், பெண் இருபாலரும் சமமாகக் கொண்டிருப்பது மிகவும் முக்கியம். திருச்சபையிலும், சமூகத்திலும் பெண்களும் ஆண் களும் சமநிலையை கொண்டிருக்கவும் பிரதிபலிக்கவும் பொறுப்புகளையும், கடமைகளையும் பகிர்ந்து கொள்ளவும் திருச்சபை வழிவகுப்பதே பெண், ஆண் இருவரையும் மதிப்பதாகும். திருச்சபை தன்னுடைய மதிப்பீடு களிலும், செயல்களிலும் தன்னையே முன்னுதாரணமாகக் கொள்வதன் மூலமாக தன்னுடைய இறைவாக்கு போதனையும், செயல்களும் ஒத்துள் ளன என்று காட்டுதல் வேண்டும். இது பாலியல் நீதி செயல்முறைகளின் இலக்குகளை எதிர்கொள்ள பெண், ஆண் இருபாலரின் திறன்களை உறுதிப்படுத்திகட்ட நிறுவன ஈடுபாட்டுப் பொறுப்பை உள்ளடக்கி யுள்ளது. வேறுபட்ட தொகுதிகளையும், அன்பியங்களையும் கணக்கிற் கொண்டு, திறன் மேம்படுத்துதலின் பல்வேறு நிலைகளை மனதிற்கொள்ள வேண்டும்.

பாலியல் நீதிக் கண்ணோட்டத்தில் திறன்களைக் கட்டி மேம்படுத்து வதற்கான நடத்துமுறைகள் (strategy):

1. பாலியல் ரீதியான வன்முறை, குடும்பம் சார்ந்த வன்முறைகள், பெண்களுக்கெதிரான வன்முறைகள் இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.
2. ஆண்களை மையப்படுத்தி ஆணி யல்களின் பல்வேறு பரிணாமங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து தல்; நிறுவன நிலையில் ஆண், பெண் இருவரையும் பாலியல் கொண்டவர்களாகவும் தனித் தன்மை உள்ளவர்களாகவும், கருதுதல்.
3. விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு, பாலியல் விவாதக் கருத்துக்களையும் விவாதங்களை யும் தூண்டக்கூடிய விவிலிய பயிற்சி குழுக்களை உருவாக்கி ஆதரித்தல்.
4. இறையியல் கல்லூரிகளிலும், நிறுவனங்களிலும் பாலியல் நீதியை பாடத்திட்டத்தோடும், இறையியல் கல்விக்கான நிகழ்வு களிலும், ஒன்றிணைத்தல்.
5. திருச்சபையிலும், சமூகத்திலும் பாலியல் ரீதியாக நிலவும் அநீதங் களை எதிர்கொள்ளவும், பாலியல் உணர்வுத் தன்மையில் வலுவூட்ட வும் ஆசிரியர்கள், தன்னார்வலர்கள்

[11] Cf. LWF Strategy, op. cit. (note 9.)

மனித மேம்பாட்டு உழைப்பாளிகள், ஆயர்கள், திருச்சபை உடனுழைப் பாளர்கள் இவர்களுக்கு, முறை சாராத பயிற்சிகளை உருவாக்குதல்.

6. திருச்சபையின் திருநிலைபடுத்தப் பட்ட பணிகளில், இறையியலில் பயிற்றுவிக்கப்பட்ட பெண்களை இணைக்க இறையியல் கல்விக்கு பெண்களை வரவேற்று ஊக்கு வித்தல்.

7. பாலியல் ரீதியாக ஏற்படும் சிக்கல் களை உணர சமூகத் தொடர்பு சாதனங்களைக் காரணியாக பயன் படுத்தல்.

8. இளம் பெண் தலைவர்களுக்கு குறியிலக்குத் திறன் உருவாக்கு தல். (Develop special targeted capacity building).

9. பாலியல் நீதியை ஒரு பொதுக் கரிசனையாகக் காண பெண், ஆண் இருபாலரையும் வலுவேற்ற, பயிற்சி, வழிநடத்தல் போன்ற செயல்முறை வகுப்புகள் மூலமாக ஊழியர்களிடையே பரஸ்பர தொடர்புகளை விரிவுபடுத்தல்.

10. நிறுவனமாக்கப்பட்ட அமைப்பு களின் எல்லா நிலைகளிலும் பெண், ஆண் இருபாலருக்கும் சமமான வாய்ப்புகளை உறுதிப் படுத்தல்.

## நிறுவன ஏற்பாடுகள்:—

L.W.F. ன் ஒரு உள்ளடக்குக் குழுமமானது, (அன்பியமானது) பன்முகத் தன்மையையும், ஒன்றுபட்டத் தன்மையையும் உள்ளடக்கியுள்ளது. இது பல்வேறு காலங்களில் கலாச்சாரத் தின் பொது நிலையினரான அல்லது திருநிலைப்படுத்தப்பட்ட பெண், ஆண் இவர்களின் பன்முகக் குழுக்களில் இவர்களின் கூட்டுப்பங்காண்மையை வளர்க்கும் பெண்களை வலுவூட்டும் செயல்திட்டங்களை நடைமுறைப் படுத்தவும், நடத்துமுறைகளைத் தெளிவாக்கவும் முடிவெடுத்தல் என்று பொருள். எனவே இது திருச்சபை யிலும், அன்பியம் அல்லது பல்வேறு குழுமங்களின் வெளிப்பாடுகளிலும் பகிரப்படும் தலைமைத்துவத்தின் மாற்றம் கொண்டுள்ள அமைப்பு களுக்கு இட்டுச் செல்லும்.

உள்ளடக்குச் செயல்முறைகள் திருச்சபை தொடர்புடைய உட் பொருளைக் கொண்டிருக்கின்றன. கடவுளின் எல்லா மக்களுக்கும் வெளிப்படையான, ஏற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகளை அளிப்பதன் மூலமாக உள்ளடக்குமுறையற்ற அமைப்புகளையும், அதிகாரங்களையும் உருமாற்றும் இறைவாக்குப் பணியை அன்பியங்கள் வாழ திருச்சபை விரும்புகிறது. பண்முகத் தன்மையும், உள்ளடக்குத்தன்மையுமே கிறிஸ்துவில் ஒன்றிப்பை உறுதி யாக்கும் முக்கியமான கூறுகளாகும்.

எல்லா அமைப்புகளிலும், நிர்வாகங்களிலும் பெண்களின் பங்கேற்பு, உள்ளடக்குத் தன்மை என்ற கொடைகளை அரவணைக்கும் திருச்சபைகளின் அளவீடுகளையும், செயலமைவுத் திட்டங்களையும் எடுக்க வேண்டுமென்று ஒன்றுகூடல் தீர்மானங்கள் உறுதிப்படுத்துகிறது. சமத்தகுதியின் அடிப்படையில் சமப் பங்களிப்பை பெண்கள் அடையத் தடுக்கும் பல செயல்முறை தடைகளை எதிர்கொள்ள உருவாக்கப் பட்ட அமைப்புத் திட்டங்களே இடஒதுக்கீட்டு முறையாகும்.

தலைமைத்துவத்தில் பெண்களும், ஆண்களும் சமபிரதிநிதித்துவம், நிறைப்பங்கேற்பை அரவணைப்பதே திருச்சபையின் உருமாற்றமும் தொடர் மறுமலர்ச்சியுமாகும். இவ்விறையியல் உறுதிப்பாட்டின் வெளிப்பாடே பெண்களின் திருநிலைப்பணியேற்பு (அருட் பொழிவு) (ordination). திருச்சபை சூழலில் பெண்களின் குடியுரிமையை கட்டியெழுப்ப அடித்தள மாகவும், திருச்சபைகளில் பாலியல் நீதியை செயல்படுத்தும் படிக்கல்லாக வும் பெண்களின் அருட்பொழிவு விளங்குகிறது.

1. திருச்சபை அங்கத்தினர்களையும், அன்பியங்களையும் ஆதரித்து உரையாடுவதின் மூலமாக நடத்தை மாற்றத்தை மேம்படுத்தல்.

2. 2012—ல் L.W.F. குழும அலுவலகத் தில் பெறப்பட்ட சமநிகர் பாலியல் வருமான சான்றிதழில் கூறப்பட்ட தேவைகளையும் நிலைகளையும் தொடர்ந்து செயலாற்றல்.

3. பாலியல் சரியீட்டு நிலை குறித்து பதினொன்றாம் ஒன்று கூடலின் தீர்வுகளின்படி, நிகழ்வுகள், கூட்டங்கள் திட்டக்குழுக்கள், குழுக்கள் இவற்றில் உள்ளடக்கு பகிர்ந்தேற்பையும், பிரதிநிதித் துவத்தையும் வலியுறுத்தல்.
4. அதிகார வன்முறை, பாலியல் வன்முறை இவைகளைக் குறித்த L.W.F. ன் பணிநெறிமுறைகளை விதிவிலக்கின்றி எல்லா ஊழியர்களையும் பின்பற்றச் செய்தல்: உறுப்பினா் திருச்சபைகளி லும், தொடா்புள்ள நிறுவனங்களி லும், பணியாளா்களின் நெறிமுறை களை பின்பற்றி மேம்படுத்தச் செய்தல்.
5. குழுமத்திலுள்ள நிறுவனங்ளுக்கும், பங்கேற்பு நிறுவனங்களுக்கும், பாலியல் தணிக்கையை செயல் படுத்தல்.
6. நிறுவனங்களின் பொருளாதாரத் திட்டங்கள், திட்டங்கள், நிகழ்வு கள் அனைத்தும் பாலியலையும் மையமாகக் கொண்டுள்ளன என உறுதிப்படுத்துதல்.
7. நிறுவனங்களில் பாலியல் நீதிக் கொள்கையின் செயல்களை ஒருங்கிணைக்கும், கண்காணிக் கும் பொறுப்புடன் கூடிய ஒரு பணியாளா் குழுவை நியமித்தல்.
8. தலைமைத்துவத்திலும், தீா்வெடுக் கும் அங்கங்களிலும் சமமான பங்கேற்றலை உறுதி செய்தல்.

## பாதுகாப்பான இடங்களும் குணமளிக்கும் குழுக்களும்:–

பாலியல் சாா்ந்த ஒவ்வொரு வன்முறைச் செயலும் கடவுளின் சாயலாக உருவாக்கப்பட்ட படைப்பைச் சிதைப்பதாகும். சமமான, நீதியான உறவுகளில் வாழ அழைக்கப்பட்ட விசுவாசிகளின் திருக்கூட்டத்தை இது உருக்குலையச் செய்கிறது. எனவே இன்னும் திருச்சபை அமைதி காத்தல் கூடாது. பட்ட காயங்களை குணப் படுத்தவும், இக்கொடுமைக்கு இரையானவா்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவும், எஞ்சியுள்ளோருக்கு நீதி வழங்கவும், தேற்றுதல் பணியில் ஈடுபட்டிருக்கும் பிறரோடு இணைந்து செயல்படுவதே திருச்சபையின் இறைவாக்குப் பணியாகும். பாலியல் வன்முறையை நியாயப்படுத்துவோா் அல்லது நிரந்தரப்படுத்துவோரை அந்நிலைக்கு பொறுப்புடையோராக்கு தலே நிறைஇறைப்பணியாகும். சிறந்த ஆணியல் உருப்படிவங்கள் பாலியல் வன்முறையை எவ்வாறு தடுத்து அடக்குகின்றன என்பதைப் பிரதி பலிக்கும் பாலியல் விவாதங்களில் ஆண்களும் பங்கெடுத்தலை வலியுறுத்துகிறது. சட்ட ரீதியாகவோ பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டோ, சூழமைகளால் அங்கீகரிக்கப்பட்டோ வரக்கூடியது. எல்லா பாலியல் சாா்ந்த அடக்குமுறையும், வன்முறையும், கொடுங்குற்றங்களும், பாவங்களே ஆகும். பாலியல் சாா்ந்த அடக்கு முறையும் வன்முறையும் நற்செய்திக்கு முரணானவை.

பாலியல் வன்முறையை விசுவாசத்தின் விவாதப் பொருளாக எதிா்கொள்ள நடப்புமுறைகள்:

1. சட்டங்களில், பொதுக்கொள்கை திட்டங்களில், கலாச்சார அல்லது திருச்சபை செயல்பாடுகளில் பாலியல் நீதி புறக்கணிக்கப் பட்டாலும் பாலியல் நீதிக்கொள்கை கள் இல்லாமற் போனாலும், பாலியல் நீதியை பிரதிபலிக்கும் புதிய செயல்முறைகள், சட்டங்கள், பொதுக்கொள்கை திட்டங்களை உருவாக்குதல் வேண்டும்.
2. பெண்களுக்கெதிரான வன்முறை யையும் பாலியல் ரீதியான வன்முறைகளையும் தடுக்க, ஆண்–பெண் (இளைஞா்–இளம் பெண்) ஆகிய இருபாலருக்கும் பாதுகாப்பிடம், அகதிகள் முகாம்கள், அவசரநிலை முகாம்கள் போன்ற பாதுகாப்பு இடங்களை அமைக்கும் செயல்களில் ஈடுபடுதல்.
3. பாலியல் நீதியை மேம்படுத்த, மத நல்லிணக்க அமைப்புகளோடும், பொதுச் சமூக நிறுவனங்களோடும் தொடா்புடைய ஐக்கிய நாட்டு முகவா்களோடும் அரசு அலுவகங் களோடும் உறவுகளை, வலைத் தளங்களை, தலைமைத்துவத்தை மேம்படுத்தி வலுவேற்றல்.
4. “Churches Say No to Violent against Woman” என்ற திருச்சபை களுக்கான L.W.F. ன் செயல் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட செயல்பாடுகளை ஒருங்கிணைத்

தல்: திருத்தொண்டு பணிகளை ஆதரித்தல், விவிலிய, மறைபோதக மூலங்களை விரிவுபடுத்துதல், தலதிருச் சபையை ஆண், பெண் இருபாலருக்கு பாதுகாப்பிடமாக்கு தல், பொதுச் சகத்தோடும், அரசு அமைப்புகளோடும் மற்றும் பிறநிறுவனங்களோடும் கூட்டுற வோடும் செயல்படுதல்.

## பரஸ்பர பொறுப்புடைமையின் உள்ளமைப்புத் திட்டங்களும், செயலமைப்புதிட்டங்களும்:–

பரஸ்பர பொறுப்புடைமையும் வெளிப்படையான உறவுகளும் ஒன்றோடென்று தொடர்புடையவை.

எங்கே நிறுவனங்களும், செயல் முறைகளும் பாலியல் ரீதியான அடக்குமுறைகளைத் தெளிவாகவும், முறையாகவும் அடையாளம் கண்டு கொள்கின்றனவோ அங்கே வெளிப் படையான பரஸ்பர பொறுப்புடைமை நிலவும். செயல்முறைகள் இறையியற் கொள்கைகளையும், கோட்பாடு களையும் ஒத்திருக்கும் உத்திரவாதத் திற்கு L.W.F. குழுமத்தில் உள்ள எல்லா அங்கங்களும், நபர்களும் பரஸ்பர பொறுப்புடைமைக்கு தங்களைத் தாங்களே கையளிப்பது இன்றியமை யாததாகும். L.W.F. ன் உள்ளிருக்கும், வெளியேயிருக்கும் பங்காளர்களுக்கு பொறுப்புடைமையின் கொள்கைகள், நடைமுறைகள், செயல்திட்டங்கள் இவற்றை வெளிப்படையாக்க வேண் டும். தன் அயலாருக்கு பணிபுரியும்



ஒரு கிறிஸ்தவனின் சுதந்திரத்தில் பரஸ்பர பொறுப்புடைமை மையம் கொண்டுள்ளது.

மனித உரிமைகளின் உலகளாவிய அறிவிப்பிற்கேற்ப ஒவ்வொரு மனிதரும் மாண்புடையோர் என்றும் உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் உரிமையானவர் என்றும் அறிகிறோம். இயேசுவின் பணியை பின்பற்றி திருச்சபையும் ஏழைகளை ஒடுக்கப்பட்டோரை, புறக்கணிக்கப்பட்டோரை, பாதிக்கப்பட்டோரை ஆதரித்துப் பேச பொறுப்பேற்றுள்ளது. சமுதாய மாற்றத்தின் இன்றியமையாத காரணிகளாக இருக்கவும், மனித மாண்பிற்கு தன்னையே கையளிக்கவும் திருச்சபையானது அழைக்கப்பட்டுள்ளது. இவ்வழியிலே உலகளாவிய மனித உரிமைச் சட்டங்களை பரிந்துரைத்து செயல்படுத்த வேண்டும். மனித மாண்பே மனித உரிமைகளின் பிறப்பிடம். வன்முறையோடும், போராட்டங்களோடும் மக்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் திருச்சபையானது உலகளாவிய மனித மாண்பு குறித்த சட்டங்களைப் பரிந்துரைத்தல் வேண்டும். இதுவே பாலியல், பாலியல் சார்ந்த வன்முறை சூழல்களுக்கும் பொருந்தும்.

இவ்வேறுபாடான தேவைகளை, உரிமைகளை, நலன்களை ஒதுக்குதல் அல்லது கண்டு கொள்ளாதிருத்தல் மானுட மாண்பில் இடறுகளைச் சந்திக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும், பிழைப்பிற்கும் எதிர்மறை விளைவுகளை உண்டுபண்ணும். ஒரு நெருக்கடி, அல்லது பேரிடர் துவக்கத்திலே பாலியல் வாதக் கருத்துக்களை ஒன்றிணைப்பது மக்களை காப்பதற்கு ஆக்கப்பூர்வமான பாதிப்பை ஏற்படுத்தும். அதற்கான நடத்துமுறைகள் கீழ்க்காண்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

1. சட்ட வழிவகை ஏற்பாடுகளைக் குறித்தும் இது தொடர்புடைய ஐக்கிய நாட்டு உடன்பாடுகளையும், பிராந்திய நெறிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. வளர்ச்சித் திட்டத்திற்கு உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை ஊக்குவித்தல்.
3. பாலியல் நீதி அணுகுமுறையோடு எல்லாவிதமான பாலியல் வன்முறைகளையும் அதிகார வர்க்கத்தன்மையையும் தடுத்து மனித மாண்பையும், மேன்மையையும் உயர்த்தும் நன்னெறி வழிமுறைகளையும், கொள்கைகளையும் பின்பற்றுதல்.
4. பாலியல் அணுகுமுறையோடு அவசரநிலை பயிற்சிகளை மேம்படுத்துதல்.
5. திட்டமிடுதலில் தீங்கொன்றும் செய்யாத அணுகுமுறையைப் பயன்படுத்துதல்.
6. திட்டங்களிலும், திட்ட செயல்பாடுகளிலும் பங்குபெற, பயனடைய சரிநிகரான வாய்ப்புகளை எல்லாருக்கும் உருவாக்குதல்.



# சொற்பொருள் அட்டவணை:

பாலினம் என்பது சமுதாயத்தால் கட்டப்பட்ட மாறுபட்ட தன்மைகளையும், ஆண், பெண் உறவு மற்றும் அவர்கள் சமூகத் தொடர்பையும், அவர்களோடு இணைந்துள்ள வாய்ப்புகளையும் குறிக்கிறது. ஒரு ஆண் அல்லது பெண் அவர்கள் இருக்கின்ற சூழலில் அவர்களிடமிருந்து என்ன எதிர் பார்க்கப்படுகிறது? எப்படி இருக்க வேண்டும்? எதைச் செய்ய வேண்டும்? என்பதைப் பாலினம் தீர்மானிக்கிறது. பெரும்பான்மையான சமுதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் நியமிக் கின்ற பாத்திரங்களிலும், பொறுப்பு களிலும் செய்ய வேண்டிய பணிகளி லும், வளங்கள் மீது அவர்களின் அணுகுமுறையிலும், அதே சமயம் முடிவெடுக்கும் வாய்ப்புகளிலும் வேற்றுமையும் சமமற்ற ஒரு சூழலும் காணப்படுகிறது.

**பாலின ஆய்வு,** சமுதாயத்தில் நிலவுகிற ஆண்—பெண் உண்மை நிலைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய கருவியாய் திகழ்கிறது. ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் தனிப்பட்ட முறையில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் தான் அனைவருக்கும் அதாவது, அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படுகிறது என்ற கருத்தை உணர்வுப்பூர்வமாய் நாம் அறியலாம்.

பாலின சமநிலை ஆணுக்கும், பெண்ணுக்குமான சமநிலை பங்களிப் பையும் பிரதிநிதித்துவத்தையும் குறிக்கிறது. பாலினம் பிரித்தல் தகவல்கள்: பாலினப் புள்ளியல் தகவல் படி மேற்கொண்ட பண்பு ரீதியான ஆய்வு:—

12 **www.**actalliance.org/resources/policies-and-guidelines/gender/ACT%20Gender%20Policy%20approved%20by%20GB%2006%20Sept%202010.pdf.view

**பாலினம் மற்றும் பாலினம் பிரித்தல் தகவல்களை இணைத்தல்:—**

பாலினத்தின் அடிப்படையில் மேற்கொண்ட தகவல் சேகரிப்பும் வகையீடும் ஒப்பிட்டு பாலின ஆய்வை செயல்படுத்த உதவுகின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்களும் ஆய்வுகளும் மொத்த மக்கள் தொகையிலுள்ள மனிதாபிமானத்தின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

**பாலின சமத்துவம்** என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிறுமியர், சிறுவர் ஆகியோருக்கான வாய்ப்புகள், உரிமைகள், மற்றம் பொறுப்புகளில் உள்ள சமநிலையைக் குறிக்கிறது. சமத்துவம் என்பது ஆணும், பெண்ணும் ஒன்று என்பதல்ல, மாறாக, அவர்களது வாய்ப்புகளும், உரிமைகளும், பொறுப்புகளும் அவர்களது பிறப்போடு சார்ந்ததாய் இருத்தல் கூடாது. இது ஆணுக்கும் பெண்ணுக்குமான விருப்பங்கள், தேவைகள், முக்கியத்துவம் ஆகியவற்றை நாம் கணக்கிற்கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**பாலினப் பங்கின்** மூலம் நாம் பாலினச் சமத்துவத்தை அடையலாம். பெண்—ஆண், சிறுமியர்—சிறுவர் ஆகியோரின் தேவைகளையும் கண்ணோட்டங்களையும் நியாயமான முறையில் அணுக வேண்டும் என குறிக்கின்றது. நியாயத்தை உறுதிப்படுத்த பெண்ணும், ஆணும் சமநிலையில் இருப்பதைத் தடுக்கும் வரலாற்றுச் சமூகத் தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பாலின அடையாளம்** என்பது, சுயஅடையாளப்படுத்தும் தன்னைப் பற்றி தானே அறிதலும், அதைச் சுயமாய் வெளிப்படுத்துதலும். இவை ஓர் பெண் அல்லது ஆண், அல்லது சிறுமி—சிறுவர் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மேலும் நம் கலாச்சாரத்தால் எதிர்பார்க்கப்படுகின்ற தன்மைகளையும், சிறப்புகளையும், பிற பாலினத்தோடு அடையாளப்படுத்துகின்ற நிலை இருந்து வருகிறது.

**பாலியல் நீதி** என்பது கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட பெண், ஆண் ஆகியோரின் பாதுகாப்புக்காகவும், மாண்பின் உயர்வுக்காகவும், அவர்கள் படைப்பை பாதுகாப்பதில் கடவுளோடு சேர்த்து உடன் பொறுப்பாளிகளாய் இருக்கிறார்கள். நிறுவனமாக்கப்பட்ட சமுதாயத்தால் ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட அடக்குமுறைகளை நிராகரிப்பதன் மூலம், ஆணுக்கும் பெண்ணுக்கும் உறவுமுறையில் அடிப்படையில் பாலியல் நீதியையும், சமத்துவத்தையும் வெளிக்கொணர முடியும்.

பாலின முக்கியத்துவம் என்பது முன்னமே திட்டமிட்டிருந்த செயல்களின் தொடக்கம் முதல் இறுதிவரை பாலினத்தைப் பற்றி இயக்குவதேயாகும்.

**பாலின முக்கியத்துவம்** என்பது, மனிதரின் தேவைகளையும், அனபவங்களையும் அவரவர் தேவைக்கேற்ப வடிவமைக்கப்படுகின்ற ஒரு யுக்தியாகவும் சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளைக் கொண்டு கொள்கைகளையும், நிகழ்வுகளையும் கண்காணித்து மதிப்பிடுவதன் மூலம் ஒரு பெண் தனக்கான நியாயத்தை பாகுபாடின்றி பெற்றுக் கொள்வாள். இவற்றின் இறுதி நோக்கம் பாலின சமத்துவம் ஆகும்.
-1997, UN ECOSOC.

**பாலியல் உணர்வுத் திறன்:—** அனைத்து களங்களிலிருந்தும் பெண்ணுக்கும் ஆணுக்குமான பொறுப்பு, நியமங்கள், செய்வடிவம், செயலாக்கம், கண்காணித்தல் மற்றும் அதை மதிப்பீடு செய்வதன் சரியான விழிப்புணர்வு ஆகும்.

[13] ibid.

[14] ibid.

[15] ibid.

[16] At www.un.org/womenwatch/osagi/intergovernmentalmandates.htm

[17] Act Alliance, op.cit. (note 12)

பால் (Sex) என்பது பெண்ணுக்கும் ஆணுக்குமான உடற்கூறுகளின் வேறுபாடு ஆகும். அத்தகைய பால் வேற்றுமைகள் பெண்–ஆண் உடல் வேறுபாடும் அவர்களது உடற்கூறு களின் செயல்பாடுமேயாகும்.

## பாலின்படி ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்கள்:

பெண்–ஆண், சிறுமி–சிறுவன் ஆகியோரின் புள்ளியல் அளவு அல்லது எண்ணிக்கைத் தகவல்:

பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது, பாலின அதிகார அடிப்படை யில் மாற்றம் மற்றும் அவர்களின் திறனுக்கேற்ப சிலவற்றை சந்திக்க செய்தலும், அவர்கள் ஏன் இரண்டாம் இடத்தில் இருக்கின்றனர் என்பதைக் குறித்து தெளிவான விழிப்புணர்வு மேயாகும். திருச்சபைகளிலும் சமுதாயத்திலும் மாற்றத்திற்கான காரணிகளாய்ப் பெண்கள் திகழ வேண்டுமெனில் இன்னும் பெண்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கு மேலும் இடம் ஒதுக்க வேண்டும். சில வரலாற்றுப் பாகுபாடுகளினால் அவர்கள் இன்னும் விலக்கப்பட்டவர் களாகவே இருக்கின்றனர். இந்த ஒரு முயற்சி பெண்களின் தன்னம் பிக்கையை அதிகரிக்க உதவியாய் இருக்கிறது. முடிவெடுக்கும் தலைமைப் பண்புகளில் பெண்கள் அதிகம் பங்கேற்க வேண்டுமென்பதில் சுயமரியாதை ஒரு முக்கிய பங்காற்று கிறது. நீடித்து நிலைக்கின்ற சமூகம், திருச்சபை, அங்கம் வேண்டுமெனில் பெண் இந்த வட்டத்திற்குள் வர வேண்டும். பெண்ணின் தரத்தை உயர்த்துதலும் அவர்களது முடிவெடுக் கும் திறனை அதிகரிக்கச் செய்தலுமே பெண்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடுவதாகும்.

[18] ibid.

[19] ibid.

# Further online gender policy resources

***ACT***
**www.**actalliance.org/resources/policies-and-guidelines/gender/ACT%20Gender%20Policy%20approved%20by%20GB%2006%20Sept%202010.pdf.view

***APRODEV***
**www.**aprodev.eu/index.php?option=com_content&view=article&id=69&itemid=29&lang=en

***CARE*** *International*
http://gender.care2share.wikispaces.net/CARE+International+Gender+Policy

***International Federation of Red Croos and Red Crescent Socities (ICRC) :***
**www.**ifrc.org/Global/Governance/Policies/gender-policy-en.pdf

***International Labour Organisation (ILO)***
**www.**ilo.org/public/english/region/asro/mdtmanila/training/unit1/harvrdfw.htm

***National Council of the Churches of Christ in the USA (NCCC)***
**www.**ncccsa.org/padfs/gender-4web.pdf

***UN Habitat***
http://ww2.unhabitat.org/pubs/genderpolicy/role.htm

***United Nations Development Programme (UNDP)***
http://hrba.undp.sk/index.php/assessment-analysis-and-planning/gender-assessment/gender-checklist

***World Health Organisation (WHO)***
www.who.int/entity/gender/mainstreaming/Gender_Manual_Glossary.pdf

© The Lutheran World Federation, 2013

Editor: Elaine Neuenfeldt

Design and Layout: Communication Services
Department for Theology and
Public Witness

Photos: © Barbara Robra and
© The Lutheran World Federation

Publisher: The Lutheran World Federation
– A Communion of Churches
Department for Theology and
Public Witness
Women in Church and Society
Route de Ferney 150
P. O. Box 2100
1211 Geneva 2, Switzerland

Printed in Switzerland

ISBN 978-2-940459-31-5

info@lutheranworld.org

# à œ÷ ì ,è‹

முன்னுரை ........................................................................................ 1

பாலியல் நீதியின் பாதையில் ஒன்றிணைந்து நடப்போம்
–ஒரு பயிற்சி பயணம் ................................................................... 2

விவிலியத்தின் அடிப்படையும் பகுத்தறிதலும் ................................... 4

L.W.F.–ன் பாலியல் நீதிக் கோட்பாட்டுக் கொள்கைகள் .................. 13

L.W.F.–ன் பாலியல் நீதிக் கொள்கை முறைமைகள் ......................... 14

சொற்பொருள் அட்டவணை ............................................................. 37

இணையதள பாலியல் நீதி குறித்து மேலும் தகவல்கள் ................ 40



THE
LUTHERAN
WORLD
FEDERATION

A Communion
of Churches